Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ்Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, MAY 10, 2023

புதன்கிழமை மே 10, 2023 | ஒளி: 08 கதிர்: 267 | பக்கம்:06 | வடக்கு,கிழக்கு | FREE

# பொறுமையை சோதிக்க வேண்டாம்

**இனப்பிரச்சினை என்பதொன்று உள்ளதா?**

**பௌத்த சின்னங்கள் அழிக்கப்படுகின்றன**

**சிவலிங்கங்கள் குடியேறுகின்றன**



சிங்களவர்களின் பொறுமைக்கும் எல்லையுண்டு என்றும் அந்த பொறுமையை தமிழ் பிரிவினைவாத அரசியல்வாதிகள் சோதிக்க கூடாது என்றும் முன்னாள் அமைச்சரும் எம்.பியுமான ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பௌத்த சின்னங்கள் அழிக்கப்பட்டு அதன் மீது சிவலிங்கங்கள் குடியேறுகின்றன என்றும் சிங்களவர்களின் பொறுமையை இனியும் சோதிக்க வேண்டாம் எனவும் எச்சரித்தார்.

மேலும், தமிழ் அரசியல்வாதிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட முன்னர், நாட்டில் இனப்பிரச்சினை என்பதொன்று உள்ளதா என்பதை ஜனாதிபதி ஆராய வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (09) இடம்பெற்ற ஏற்றுமதி அபிவிருத்தி சட்டத்தின் கட்டளைகள் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் தெரிவிக்கையில், "இலங்கை சிங்கள பௌத்த நாடு என்பதற்கு வரலாற்று ரீதியிலான சான்றுகளாக பௌத்த தொல்பொருள் சின்னங்கள் நாடு முழுவதும் காணப்படுகின்றன.

தொடர்ச்சி P2



# 16 வயது சிறுமி மரணம்

## பிரதான சந்தேகநபர் கைது

களுத்துறையில் 16 வயது சிறுமியின் நிர்வாண சடலம் கண்டெடுக்கப்பட்ட சம்பவம் குறித்து, 29 வயதுடைய பிரதான சந்தேகநபரை செவ்வாய்க்கிழமை (09) அதிகாலை ஹிக்கடுவையில் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். களுத்துறை, காலி வீதியின் பிரதான வீதியில் உள்ள ஹோட்டல் ஒன்றின் பின்புறம் உள்ள தண்டவாளத்துக்கு அருகில் இருந்து களுத்துறை, நாகொட பிரதேசத்தை சேர்ந்த சிறுமியின் நிர்வாண சடலம் கண்டெடுக்கப்பட்டதை அடுத்து களுத்துறை தெற்கு பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர்.

தொடர்ச்சி P2

அவுஸ்திரேலியாவில் இருந்து

## நாடு கடத்தப்பட்ட 41 பேரும் வந்தடைந்தனர்



சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்குள் நுழைய முற்பட்ட போது கைது செய்யப்பட்டு நாடு கடத்தப்பட்ட, இலங்கையர்கள் 41 பேர் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் அவுஸ்திரேலிய அதிகாரிகளால் ஒப்படைக்கப்பட்டனர்.

பல நாள் மீன்பிடி இழுவை படகில் அவுஸ்திரேலியா நோக்கிச் சென்ற போது, இந்தக் குழு இடைமறிக்கப்பட்டு கிறிஸ்மஸ் தீவில் தடுத்து வைக்கப்பட்டதாகவும் இவர்களில் பெரும்பாலானோர் யாழ்ப்பாணம் மற்றும் வாழைச்சேனை பிரதேசங்களை சேர்ந்தவர்கள் என்றும் தெரியவந்துள்ளது.

தொடர்ச்சி P2

கொழும்பு, நுவரெலியாவில்

## கண் வெண்புரை அறுவை சிகிச்சை இடைநிறுத்தம்

**மருந்தே காரணம் என்கிறார் டொக்டர் மஹேந்திர**

■ டி.ஷங்கீதன்

"நாம் தற்பொழுது தற்காலிகமாக கண் சத்திரசிகிச்சையை இடைநிறுத்தி இருக்கின்றோம். இந்தச் சம்பவம் நுவரெலியாவில் மாத்திரம் அல்ல; கொழும்பிலும் இடம்பெற்றுள்ளது. எனவே, இது வைத்தியர்களின் தவறு அல்ல; பாவிக்கப்பட்ட மருந்தே காரணம் என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்" என்று நுவரெலியா மாவட்ட வைத்திய அதிகாரி டொக்டர் மஹேந்திர செனவிரத்ன தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

தன்பாலின சேர்க்கை திருத்த சட்டமூலம்

## அரசியலமைப்புக்கு முரணானது அல்ல

தன்பாலின சேர்க்கையை குற்றமற்றதாக்கும் வகையில் முன்வைக்கப்பட்டுள்ள திருத்தச் சட்டமூலம், அரசியலமைப்புக்கு முரணானது அல்ல என்று உயர் நீதிமன்றம் வியாக்கியானம் செய்துள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, செவ்வாய்க்கிழமை (09) பாராளுமன்றத்துக்கு அறிவித்தார்.

தொடர்ச்சி P2

தற்காலிக தலைவராக

## ஜோன்ஸ்டனை நியமித்தமைக்கு சபையில் கடும் எதிப்பு



ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் என்ற வகையில் சபாநாயகர் செயற்படுவதாக குற்றம்சாட்டிய எதிர்க்கட்சி எம்.பிக்கள், அரசாங்க நிதி தொடர்பான தெரிவுக்குழுவின் தற்காலிக தலைவராக ஜோன்ஸ்டன் பெர்ணான்டோவை நியமித்தமைக்கு கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

பாராளுமன்றம் செவ்வாய்க்கிழமை (09) கூடியபோது, "பாராளுமன்ற நிலையியல் கட்டளையின் பிரகாரம் அரசாங்க நிதி தொடர்பான

தொடர்ச்சி P2

## காலிமுகத்திடல் கர்ம வினை துரத்துகிறது



களுத்துறையில் சில நாள்களுக்கு முன்னர் 16 வயது சிறுமியொருவர் உயிரிழந்த சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் காலிமுகத்திடல் போராட்டத்தின் பிரதான செயற்பாட்டாளர்களில் ஒருவராக இருந்தவர் என்று தெரிவித்த ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன, காலிமுகத்திடல் போராட்டத்துடன் தொடர்புபட்டு இருந்தவர்களை கர்ம வினை துரத்திக்கொண்டிருக்கின்றது என்று தெரிவித்தார்.

ஒருவருடத்துக்குள் போராட்டக்காரர்கள் பலர் இறந்துள்ளனர் என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (09) இடம்பெற்ற ஏற்றுமதி அபிவிருத்தி சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போது மேற்கண்ட விடயத்தைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

"காலிமுகத்திடல் போராட்டத்தில் பந்தமேந்தி மந்திரம் ஓதி செயற்பட்ட பூசாரி, மின்னல் தாக்குதலுக்கு உள்ளாகி இறந்துள்ளார். அதேபோன்று அங்கிருந்த நூலகத்திற்கு பொறுப்பாக இருந்தவர் தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## 92,435 இலங்கை அகதிகள் தமிழ்நாட்டில் உள்ளனர்




தமிழ்நாட்டின் அகதி முகாம்களுக்கு உள்ளேயும் வெளியேயும் மொத்தமாக 92,435 பேர் வசிக்கின்றனர் என்றும் அவ்வாறு முகாம்களில் தங்கியுள்ளவர்கள் இலங்கைக்கு தாம் திரும்புவதற்கு விரும்பினால் அவர்கள் அந்த முகாம் பொறுப்பாளரிடம் அதற்கான விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும் என்றும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

கடந்த மார்ச் மாதத்தில்

## சுற்றுலாத்துறைக்கு ரூ.63 மில்லியன் வருமானம்



இலங்கையின் சுற்றுலாத்துறைக்கு கடந்த மார்ச் மாதத்தில் 198 மில்லியன் அமெரிக்க டொலர் (633 கோடி ரூபாய்) வருமானம் கிடைத்துள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன.

தொடர்ச்சி P2

## ஒரே நேரத்தில் சந்திக்க இணக்கம்

வடக்கு, கிழக்கு ஆகிய இரண்டு மாகாணங்களைச் சேர்ந்த தமிழ் எம்.பிக்களையும் ஒரே நேரத்தில் சந்திக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இணக்கம் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான குழுவுடன் ஜனாதிபதி செயலகத்தில் செவ்வாய்க்கிழமை நடந்த சந்திப்பின்போது இந்த இணக்கம் வெளியிடப்பட்டது.

தொடர்ச்சி P2



## 1 பில். கடன்வரியை நீடித்தது இந்தியா

இலங்கைக்கான 1 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் வரியை, ஒரு வருட காலத்துக்கு இந்தியா நீட்டித்துள்ளது என்று திறைசேரியின் பிரதிச் செயலாளர் பிரியந்த ரத்நாயக்கவை மேற்கோள் காட்டி, ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையின் அத்தியாவசிய இறக்குமதிகளுக்கு பணம் செலுத்துவதற்கான காப்பு நிதியை வழங்கும் வகையிலேயே இந்த உதவி நீட்டிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

பாடசாலைகளுக்கு விசேட இராணுவப் பாதுகாப்பு



## சிற்றுண்டி கொடுத்து மன்னார் சிறார்களை கடத்த முயற்சி

■ எஸ்.றொசேரியன் லெம்பேட்

மன்னாரில் மக்கள் நடமாட்டம் குறைந்த பாதை வழியாக பயணித்த இரு சிறுவர்களுக்கு உணவு பொருட்களை வழங்கி, கடத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாக பாதிக்கப்பட்ட சிறுவர்கள் தெரிவித்திருந்த நிலையில், பாடசாலைகளுக்கு விசேட இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



## முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கல் வல்லையில் ஆரம்பம்

■ எஸ் தில்லைநாதன்

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில், முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு வல்வெட்டித்துறை, ஆலடிச் சந்தியில் செவ்வாய்க்கிழமை (09) காலை இடம்பெற்றது.

எதிர்வரும் 14ஆம் திகதிவரை தமிழர் தாயகம் எங்கும் பயணித்து முள்ளிவாய்கால் கஞ்சியை எமது பரிமாறி, வரலாற்றையும் வலிகளையும் எமது இளைய தலைமுறையினருக்கு கடத்தும் செயற்பாடு முன்னெடுக்கப்படவுள்ளது.

தொடர்ச்சி P2

## ஜீவனை சந்தித்தார் கடம்பூர் ராஜு



இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள தமிழகத்தின் முன்னாள் செய்தித்துறை அமைச்சர் கடம்பூர் செ.ராஜு தலைமையிலான அ.தி.மு.க குழுவினர், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொது செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமானை கொழும்பில் உள்ள அமைச்சில் சந்தித்து கலந்துரையாடினர்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்



# 16 வயது சிறுமி மரணம் பிரதான சந்தேகநபர் கைது

கைது செய்யப்பட்ட நபர், உயிரிழந்த சிறுமியுடன் குறித்த ஹோட்டலுக்கு அழைத்து வந்துள்ளதுடன் அவர்களுடன் மற்றுமொரு யுவதி மற்றும் ஆண் ஆகியோரும் ஹோட்டலின் மூன்றாம் மாடியில் இரண்டு அறைகளை எடுத்து தங்கியுள்ளனர்.

இளம் தம்பதியினர் ஹோட்டலை விட்டு வெளியேறிய நிலையில் சில நிமிடங்களில் சந்தேகநபரும் ஹோட்டலை விட்டு வெளியேறியுள்ளார்.

பின்னர் ஹோட்டலுக்கு வந்த நபர் ஒருவர், ஹோட்டலுக்கு அருகில் உள்ள ரயில் பாதையில் பெண் ஒருவர் நிர்வாணமாக கிடப்பதாக ஹோட்டல் ஊழியர்களுக்கு தகவல் கொடுத்துள்ளார்.

இதன்பின்னர் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், இளம் தம்பதிகள் மற்றும் காரின் சாரதி ஆகியோர் கைது செய்யப்பட்டு, களுத்துறை நீதவான் முன்னிலையில் ஞாயிற்றுக்கிழமை (07) ஆஜர்படுத்தப்பட்ட நிலையில், அவர்களை எதிர்வரும் மே மாதம் 15ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

தேடப்பட்டுவந்த பிரதான சந்தேகநபர், செவ்வாய்க்கிழமை (09) ஹிக்கடுவ பிரதேசத்தில் மறைந்திருந்த போது கைது செய்யப்பட்டதாகத் தெரிவித்த பொலிஸார், அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளதாகத் தெரிவித்தனர்.

## நாடு கடத்தப்பட்ட 41...

அவுஸ்திரேலியாவில் இருந்து பெருமளவான பாதுகாப்பு உத்தியோகத்தர்களுடன் அழைத்துவரப்பட்ட இலங்கையர்கள், செவ்வாய்க்கிழமை (09) காலை 9.40 மணியளவில் விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகராலயத்தின் மூன்று சிரேஷ்ட அதிகாரிகள், இலங்கை குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகளிடம் இந்தக் குழுவை ஒப்படைப்பதற்காக கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு சென்றிருந்தனர்.

தேசிய புலனாய்வு அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட ஆரம்பக்கட்ட விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர்கள், விமான நிலைய குற்றப்புலனாய்வு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டு நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர் என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

## அரசியலமைப்புக்கு...

அரச தரப்பு எம்.பி.யான பிரேம்நாத் சி. தொலவத்தவால் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட குற்றவியல் (திருத்த) சட்டமூலம், இலங்கையின் அரசியலமைப்புக்கு முரணானது என தீர்ப்பளிக்க கோரி, ஓய்வுபெற்ற இராணுவ பிரிகேடியர் கே.அதுல எச்.டி சில்வா, ஷெனாலி டி.வடுகே, ஜெஹான் ஹமீட் ஆகியோரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்தத் திருத்தம் தண்டனைச் சட்டம் தொடர்பான பாராளுமன்றத்தின் எதிர்பார்ப்புகளுக்கு முரணானது என்றும், அதன் மூலம் அரசியலமைப்பின் விதிகளை கடுமையாக மீறப்படுவதாகவும் பௌத்த, இந்து, கிறிஸ்தவ , இஸ்லாமிய நம்பிக்கைகளுக்கு ஏற்புடையதல்ல என்றும் மனுதாரர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இந்த மனு பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, நீதியரசர்களான விஜித் மலல்கொட, அர்ஜூன் ஒபேசேகர ஆகியோர் அடங்கிய மூன்று நீதியரசர்கள் கொண்ட குழாம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மனு மீதான விசாரணையை கடந்த ஏப்ரல் 21 ஆம் திகதி நிறைவு செய்த உயர் நீதிமன்றம், பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட குற்றவியல் (திருத்த) சட்டமூலத்தின் சரத்துகள் இலங்கையின் அரசியலமைப்புக்கு ஏற்புடையதா அல்லது முரணானதாக என்ற தமது முடிவை சபாநாயகருக்கு அறிவிப்பதாக கூறியது.

தன்பாலின சேர்க்கையை குற்றமற்றதாக்கும் வகையில் முன்வைக்கப்பட்டுள்ள திருத்தச் சட்டமூலம், அரசியலமைப்புக்கு முரணானது அல்ல என்று உயர் நீதிமன்றம் வியாக்கியானம் செய்துள்ளது.

## ஜோன்ஸ்டனை நியமித்தமை...

தெரிவுக்குழுவின் தலைவர் பதவியை ஹர்ஷ டி சில்வாவுக்கு ஏன் வழங்க முடியாது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த ஆளும்கட்சியின் பிரதம கொறடாவான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, அரசாங்க நிதி தொடர்பான தெரிவுக்குழுவுக்கு உறுப்பினர்களை பரிந்துரை செய்யும் அதிகாரம் அரச மற்றும் எதிர்க்கட்சிகளுக்கு வழங்கப்படவில்லை. தெரிவு குழு ஊடாகவே தலைவர் தெரிவு செய்யப்படுவார் என்றார்.

தலைவர் பதவியை நாங்கள் எதிர்க்கட்சியின் உறுப்பினர் மயந்த திஸாநாயக்கவுக்கு வழங்கிய போதும் அதனை ஏற்கும் மனநிலை எதிர்க்கட்சிகளுக்கு இல்லை என்றும் அதற்கு தாங்கள் பொறுப்புக் கூற முடியாது என்றும் குறிப்பிட்டார்

நிலையான தலைவர் இல்லாமல் தெரிவு குழுவால் எவ்வாறு முறையாக செயற்பட முடியும் என்று கேள்வியெழுப்பிய சுயாதீன எதிர்க்கட்சி எம்.பி. சந்திம வீரக்கொடி, பாராளுமன்ற நிலையியல் கட்டளையின் பிரகாரம் தலைவர் பதவி எதிர்க்கட்சிக்கு வழங்கப்பட வேண்டும் என்றார். வாசுதேவ நாணயக்கார, மொஹமட் முஸம்மில் ஆகியோரும் தலைவர் பதவி எதிர்க்கட்சிக்கு வழங்கப்பட வேண்டும் என்றனர்.

இதேவேளை, பொதுஜன பெரமுனவின் உறுப்பினராக சபாநாயகர் இருக்கலாம். எனினும், பெரமுனவின் உறுப்பினர் என்ற வகையில் சபாநாயகர் செயற்படக்கூடாது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் ரஞ்சித் மத்தும பண்டார குறிப்பிட்டார்.

# பொறுமையை சோதிக்க வேண்டாம்

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண தமிழ் பிரிவினைவாத அரசியல்வாதிகள் பௌத்த மதத்துக்கும்,பௌத்த புராதன தனித்துவத்துக்கும் எதிராக திட்டமிட்ட வகையில் செயற்படுகிறார்கள். பௌத்த மதத்தை அழிக்கிறார்கள். ஆனால் சிங்களவர்கள் பிற மதங்களை அழிக்கவில்லை.

பிரிவினைவாத தமிழ் அரசியல்வாதிகள் திட்டமிட்டு பௌத்த மத வழிபாடுகளுக்கு பல்வேறு வழிகளில் தடையேற்படுத்துகிறார்கள். வெடுக்குநாறி பகுதியில் பௌத்த புராதன சின்னங்கள் அழிக்கப்பட்டு அதன் மீது சிவலிங்கங்கள் குடியேறியுள்ளன .

வடக்கில் யுத்தம் தீவிரமடைந்த காலத்தில் கொழும்பில் இந்துக்கள் மத வழிபாடுகளில் ஈடுபட்டார்கள்; தேர் இழுத்தார்கள்; சிங்கள பௌத்தர்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்கினார்கள். ஆகவே சிங்களவர்களின் பொறுமைக்கும் எல்லையுண்டு. அந்தப் பொறுமையை தமிழ் பிரிவினைவாத அரசியல்வாதிகள் சோதிக்க கூடாது" என்றார்.

## காலிமுகத்திடல் கர்மவினை...

வெசாக்கின் போது கறுப்பு நிறத்தில் வெசாக் கூடு செய்தவர் இப்போது மனநோய் வைத்தியசாலையில் உள்ளார். இந்தப் போராட்டத்தில் முக்கியமாக இருந்த ஒருவர் தெஹிவளை பகுதியில் ரயிலில் மோதி உயிரிழந்துள்ளார். இன்னுமொருவர் நீரில் மூழ்கி இறந்துள்ளார். இதேவேளை மஹிந்த ராஜபக்ஷவுக்கு மரண போஸ்டர் அச்சிட்டவர் லங்கா வைத்தியசாலையில் மரணித்துள்ளார். இதுதான் கர்ம வினையால் கிடைப்பவை.

இதேவேளை ஜனாதிபதியின் கொடியை திருடிச் சென்ற தொழிற்சங்க பிரதானி ஓட்டோ விபத்தில் காலொன்றை இழந்துள்ளார். அதுகோரல எம்.பியின் கொலையுடன் தொடர்புடைய ஒருவர் சிறையில் உயிரிழந்துள்ளார். இவை இந்த ஒரு வருடத்திற்குள் நடந்தவை. கர்ம வினையின் பலன்களை இப்போது காணக்கூடியதாக உள்ளது.

அண்மையில், களுத்துறை நகரில் 16 வயது சிறுமி உயிரிழந்த சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர், போராட்டத்தின் களுத்துறை மாவட்ட ஏற்பாட்டாளர் என்றும் இவர் இரண்டு திருமணங்களை முடித்தவர் என்றும் குறிப்பிட்டார்.

## 92,435 இலங்கை அகதிகள்...

இவ்வாறாயினும் நாடு திரும்பும் அனைவரையும் நாங்கள் வரவேற்கின்றோம் எனவும் அவர்களுக்கு எத்தகைய ஒத்துழைப்புகளை வழங்க வேண்டுமோ அதனை அரசாங்க மேற்கொள்ளும் என்றும் உயர்ஸ்தானிகர் அதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் மேற்கொள்வார் என்றும் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (09) வாய்மூல விடைக்கான வினா நேரத்தில், சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவித்த அவர், இடம்பெயர்ந்து தமிழ்நாட்டில் வாழும் இலங்கை தமிழ் மக்கள் தொடர்பான பிரச்சினைகளை வடக்கு எம்.பிக்கள் ஜனாதிபதியுடன் நடத்தவுள்ள பேச்சுவார்த்தையின் போது விரிவாக கலந்துரையாடி, அதற்கான தீர்வுகளை பெற்றுக் கொள்ள முடியும்.

இடம்பெயர்ந்து தமிழ்நாட்டில் வாழும் இலங்கை தமிழ் மக்களை நாம் வரவேற்கின்றோம். அவர்கள் நாட்டிற்கு திரும்பி, இயல்பு வாழ்க்கையை மேற்கொள்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொள்ளும் என்றார்.

அலி சப்ரி மேலும் கூறுகையில்,

தமிழ்நாட்டில் செயற்பட்டு வரும் 106 அகதி முகாம்களில் 19 ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த 58 ஆயிரத்து 435 பேர் வசித்து வருகின்றனர்.

குறிப்பாக படகுகள் மூலம் தமிழ்நாட்டுக்குச் சென்ற அகதிகள் மற்றும் 2012 ஏப்ரல் வரை விமானம் மூலம் சென்றவர்கள்அகதி முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அதற்கு முன்னர் அங்கு சென்றவர்கள் அகதி முகாம்களில் பதிவு செய்யப்படவில்லை.

அகதி முகாம்களுக்கு வெளியில் வசிக்கும் சுமார் 10,000 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் 34 ஆயிரம் பேர், தாம் வசிக்கும் பிரதேசத்தில் உள்ள பொலிஸ் நிலையங்களில் தம்மைப் பதிவு செய்துள்ளனர்.

படகுகள் மற்றும் விமானங்கள் மூலம் தமிழ்நாட்டுக்குச் சென்றுள்ள இலங்கை தமிழர்களில் ஒரு பிரிவினர், தமது சொந்த விருப்பத்தின் பேரிலேயே அகதி முகாம்களுக்கு வெளியில் வசிக்கின்றார்கள் என்றார்.

## சுற்றுலாத்துறைக்கு ரூ.633 கோடி வருமானம்

2022ஆம் ஆண்டு சுற்றுலா மூலம் இலங்கைக்கு கிடைத்த வருமானம் 161.2 மில்லியன் அமெரிக்க டொலராகும் என்றும் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 22.8 சதவீத வளர்ச்சியாகும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

2022 மார்ச் மாதத்தில் 106,500 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளதாகவும், இந்த ஆண்டு மார்ச் மாதத்தில் 17.8 சதவீத வளர்ச்சியை வெளிப்படுத்தி 125,495 பேர் நாட்டுக்கு வந்துள்ளதாகவும் மத்திய வங்கி அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

ரஷ்யா முதலிடத்திலும் (20 சதவீதம்) இந்தியா (15 சதவீதம்), ஐக்கிய இராச்சியம் (9 சதவீதம்), ஜேர்மனி (8 சதவீதம்), பிரான்ஸ் மற்றும் அமெரிக்கா (5 சதவீதம்) ஆகிய நாடுகளின் சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

சுற்றுலாப் பயணிகளின் வருகையில் தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில், இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் மட்டும் 105,498 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை பதிவாகியுள்ளது.

2023 ஆம் ஆண்டின் முதல் 4 மாதங்களில் 441,177 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

## கண் வெண்புரை அறுவை...

மேலும், கொழும்பு தேசிய கண் வைத்தியசாலையிலும் குறித்த மருந்து பாவிக்கப்பட்டு அங்கும் கண் பார்வை பாதிக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. தற்பொழுது அந்த வைத்தியசாலையிலும் தற்காலிகமாக கண் சத்திர சிகிச்சை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலையின் பொறுப்பு வாய்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் கண் சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டவர்களில் 10 பேருக்கு கண்பார்வை இழக்கப்பட்டுள்ளதாக பல்வேறுவிதமான தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பாக உண்மையான நிலைமை என்ன என்பதை அறிந்து கொள்வதற்காக நுவரெலியா மாவட்ட வைத்திய அதிகாரி டொக்டர் மஹேந்திர செனவிரத்ன மேலும் தெரிவித்ததாவது,

"கடந்த ஏப்ரல் மாதம் 5ஆம் திகதி பௌர்ணமி தினத்தன்று நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் 34 பேருக்கு கண் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டவர்களில் 10 பேர் சத்திரசிகிச்சையின் பின்பு தங்களுக்கு கண் சிவப்பு நிறமாக மாறியுள்ளதாகவும் கண் உறுத்தல் ஏற்படுவதாகவும் கண்ணில் வருத்தம் ஏற்படுவதாகவும் கண் பார்வை குறைந்துள்ளதையும் சுட்டிக்காட்டி மீண்டும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நாம் உடனடியாக இவர்களுக்கான சிகிச்சைகளை ஆரம்பித்ததுடன், இவர்களில் ஒரு சிலரை கண்டி வைத்தியசாலைக்கும் அனுப்பி வைத்துள்ளோம். அவர்களில் அநேகமானவர்களுக்கு தற்பொழுது 30 சதவீதமான பார்வை திரும்பியுள்ளது. நாம் தொடர்ந்தும் அவர்களுக்கு சிகிச்சை அளித்து வருகின்றோம்.

இந்த நிலைமைக்கு காரணம் வைத்தியர்கள் அல்ல என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். இதற்கு முக்கிய காரணமாக அமைந்தது இந்தச் சத்திரசிகிச்சையின் பின்பு பாவிக்கப்பட்ட மருந்தாகும். அந்த மருந்தில் கிருமிநாசினி இருக்கின்றமை கண்டறியப்பட்டுள்ளது.

PREDNISOLONE ACETATE EYE DROP என்ற இந்த மருந்தானது இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்டுள்ளது" என்றார்.

## ஒரே நேரத்தில் ...

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை பெற்றுக்கொடுப்பது தொடர்பில் எதிர்வரும் வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமை நாள்களில் சந்திப்புகள் நடக்கவுள்ளன.

கிழக்கு மாகாண எம்.பிக்களை அழைக்காமல் வடக்கு எம்.பிக்களை மாத்திரம் ஜனாதிபதி சந்திக்க முன்னர் ஏற்பாடாகியிருந்தது. ஆனால் இன்றைய சந்திப்பில் இதுவிடயம் பிரஸ்தாபிக்கப்பட்டது. அதனையடுத்தே அந்த முடிவை ஜனாதிபதி மாற்றியுள்ளார்.

## 1 பில். கடன் வரியை நீடித்தது...

2022ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் நிதி நெருக்கடியின் உச்சக்கட்டத்தில் இலங்கை இருந்த போது, இந்தியாவால் வழங்கப்பட்ட சுமார் 4 பில்லியன் டொலர் அவசர உதவியின் ஒரு பகுதியான கடன் வரி மார்ச் மாதத்துடன் முடிவடையும் என்று திட்டமிடப்பட்டது.

இந்நிலையில் மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தைகளின் பின்னர், கடன் வரியை 2024ஆம் ஆண்டு மார்ச் வரை நீட்டிக்கப்பட்டது என்று பிரியந்த ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கடன்வரியில் சுமார் 350 மில்லியன் டொலர் மீதமுள்ளன என்றும் அவை தேவைக்கேற்ப பயன்படுத்தப்படலாம் என்றும் குறிப்பிட்ட அவர், சந்தையில் அந்நியச் செலாவணி கிடைப்பது அதிகரித்துள்ள காரணத்தால், கடந்த வருடத்தைப் போல் தேவை அதிகமாக இல்லை என்று குறிப்பிட்டார்.

மார்ச் மாதம் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கிட்டத்தட்ட 3 பில்லியன் டொலர் பிணை எடுப்புப் பொதியை இலங்கை இறுதி செய்ததோடு, முக்கிய இருதரப்புக் கடனாளிகளான இந்தியா, ஜப்பான் மற்றும் சீனாவுடன் கடன் மறுசீரமைப்புப் பேச்சுகளை ஆரம்பித்ததன் மூலம் நிலைமை இப்போது முன்னேறியுள்ளது.

கடந்த மாத இறுதியில் இலங்கையின் அந்நிய செலாவணி கையிருப்பு 2.7 பில்லியன் டொலரை எட்டியுள்ளமையும் சுட்டிக்காட்டத்தக்கது.

## சிற்றுண்டி கொடுத்து மன்னார்...

மன்னாரில் கடந்த சில நாள்களாக சிறுவர்களை இலக்கு வைத்து கடத்தல் முயற்சிகள் இடம்பெறுவதாகவும் சனிக்கிழமை (06) மற்றும் திங்கட்கிழமையே சிறுவர்களைக் கடத்தும் முயற்சி இடம்பெற்றுள்ளது.

இந்த நிலையில் குறித்த விடயம் மாவட்ட அரசாங்க அதிபர், வலயக்கல்வி பணிப்பாளர், மன்னார் பொலிஸார், இராணுவத்தினரின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது.

இதையடுத்து, மன்னாரில் உள்ள பாடசாலைகளுக்கு செவ்வாய்க்கிழமை(09) விசேட இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டு இருப்பதுடன் பொலிஸாரும் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அதேநேரம், அதிகளவான பெற்றோர் பிள்ளைகளுடன் பாடசாலைக்கு வருவதையும் மாணவர்கள் குழுக்களாக பயணிப்பதையும் வீதிகளில் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

மேலும் குறித்த கடத்தல் முயற்சி தொடர்பில் மன்னார் பொலிஸில் திங்கட்கிழமை (08) முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில் குறித்த கடத்தல் கும்பல் மற்றும் வாகனம் தொடர்பாக மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## முள்ளிவாய்க்கால் கஞ்சி...

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியத்தின் சிவில் சமூகத்தினர், காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்கள், ஊடகவியாளர்கள் என பலரும் கலந்துகொண்டதுடன் கஞ்சி வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 14 ஆம் திகதி பொத்துவிலில் நிறைவடையவுள்ளது.

விடுதலைக்காக உயிரைத் துச்சமாக மதித்து, களத்தில் நின்ற எமது மக்கள், பட்டினி சாவை எதிர்கொள்ளக் கூடாது என்று தமிழர் புனர்வாழ்வு கழகமும், விடுதலை சார்ந்த அமைப்பும் தம்மிடம் இருந்த அரிசியை பங்கிட்டு முள்ளிவாய்க்கால் கஞ்சியாக காய்ச்சி, அதை மக்களுக்கு வழங்கி, மக்களைப் பட்டினி சாவிலிருந்து காத்தனர்.

எறிகணைகளும் கொத்து குண்டுகளும் எமது மக்களை கொத்து கொத்தாக கொன்ற போதும் பட்டினியால் மக்கள் இறக்கவில்லை. இந்த உயிர் காத்த கஞ்சியையே இன்று நாம் எமது உரிமை போராட்டத்தின் ஒரு வடிவமாக, எமது மக்களின் மீதான இனவழிப்பின் சர்வதேச நீதி தேடலின் ஒரு கருவியாக எமது இளம் சமுதாயத்திற்கு கடத்த வேண்டிய ஒரு கட்டுப்பாட்டில் நாம் அனைவரும் உள்ளோம்.

நாம் எமது இனவிடுதலையை அடையும் வரை, இக்குறியீடு கடத்தப்படும் என உறுதியெடுக்கின்றோம். நாம் முன்னெடுக்கும் இச்செயற்பாட்டில் அனைத்து தமிழ் மக்களும் எல்லா வேறுபாடுகளையும் துறந்து தமிழினமாக எம்முடன் இணையுமாறு அன்புரிமையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

உங்களின் மாவட்டத்திற்கு வரும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு கஞ்சிக்கு உரிய அரிசி மற்றும் இதர பொருட்களை வழங்கி விடுதலைக்கான பயணத்தில் பங்கெடுக்குமாறும் எங்கள் இனத்தின் வலிகளையும் தொடராக உலகெங்கும் உள்ள அனைவருக்கும் கடத்துமாறு வேண்டி நிற்கின்றோம் என, ஏற்பாட்டு குழுவினர் கோருகின்றனர்.

## ஜீவனை சந்தித்தார் கடம்பூர் ராஜூ

மரியாதை நிமித்தம் திங்கட்கிழமை (08) நடைபெற்ற இந்தச் சந்திப்பில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான், இலங்கை - இந்திய சமுதாய பேரவையின் சார்பில் சிவராமன் மற்றும் காந்தி ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

எம்.ஜி.ஆர் அறக்கட்டளை மூலம் முன்னெடுக்கப்படும் பணிகள் தொடர்பில் அமைச்சர் ஜீவன் தொண்டமானிடம் எடுத்துரைத்த அவர்கள், இலங்கை மக்களுக்கு சேவை செய்ய தயாராக இருப்பதாக தமது விருப்பத்தை வெளியிட்டனர்.

இதற்கமைய செவ்வாய் (09), புதன்கிழமைகளில் (10) மலையக பகுதிகளுக்கு நேரில் விஜயம் செய்து, மக்களுடன் கலந்துரையாடவுள்ளனர்.

மேற்படி குழுவினரால் மக்களுக்காக உதவி திட்டங்களை முன்னெடுக்கும் பட்சத்தில் அதற்கான முழு ஒத்துழைப்பையும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் வழங்கும் என்று அமைச்சர் ஜீவன் தொண்டமான் இதன்போது தெரிவித்தார்.



# 10 வோட்டர் ஜெல் கூறுகளுடன் எழுவர் கைது

வோட்டர் ஜெல் என்றழைக்கப்படும் வெடிமருந்துகள் நிரப்பப்பட்ட 10 கூறுகளுடன் ஏழுவர், மன்னார் கடற்பரப்பில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார், வங்காலை பிரதேசத்துக்கு அப்பாலுள்ள கடலில், திங்கட்கிழமை (08) மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின் போது, சட்டவிரோதமான முறையில் மீன்பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டின் கீழ் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவர்களிடம் இருந்து வோட்டர் ஜெல் என்றழைக்கப்படும் வெடிப்பொருட்கள் நிரப்பப்பட்ட கூறுகள் 10, மின்சாரம் இல்லாத டெட்டனேட்டர்கள் 18, சுழியோடுவதற்கு தேவையான உபகரணங்கள் மற்றும் டிங்கி படகு ஆகியன கைப்பற்றப்பட்டுள்ளன.

மீன்கள் அற்ற நிலையில் வெடி பொருட்கள் மட்டும் உடைமையில் இருந்ததால் வங்காலை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

பொலிஸார் விசாரணையின் பின்னர் குறித்த மீனவர்களை செவ்வாய்க்கிழமை (09) மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினர்.

விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதவான் குறித்த மீனவர்களை எதிர்வரும் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

# முன் நிபந்தனையுடன் பேச வேண்டும்

தமிழ் தேசிய கட்சிகள் முன் நிபந்தனையுடன் வடக்கு, கிழக்கு இணைந்த கூட்டமைப்பாகவே அரசாங்கத்துடன் பேச்சுகளில் பங்கேற்க வேண்டும் என்று ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பில் அந்த அமைப்பின் அழைப்பாளர், தென் கயிலை ஆதீன முதல்வர் தவத்திரு அகத்தியர் அடிகளார் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

இன்று வடக்கு, கிழக்கு தமிழர் தாயகம் முழுவதும் தொல்லியல் திணைக்கள அடாவடிகளும் கோவில்கள் அழிப்பும், அத்துமீறிய பௌத்த விஹாரைகள் அமைப்பும், பௌத்தமயக்கலும் அசுர வேகத்தில் அரச இயந்திரத்தால் முன்னெடுக்கப்படுகின்ற நிலையில் அரசாங்கத்தின் பேச்சுக்கான அழைப்பை நாம் மிக கவனமாகக் கையாள வேண்டும்.



ஒவ்வொரு முறையும் பேச்சுக்கு அழைத்து, பசப்பு வார்த்தைகளை கூறுகின்றார்களே அன்றி உருப்படியான நடைமுறை ரீதியிலான நீண்டகால தீர்வுகள் எதனையும் வழங்குவதாகவோ செயலில் உறுதிமொழிகளை நடைமுறைப்படுத்துவதாகவோ இல்லை. மாறாக, படிப்படியாக எமது தனித்துவம், நிலங்கள் என்பன திட்டமிட்டு பொதுமைப்படுத்தப்பட்டு வருவதுடன் இவ்வாறான பேச்சுகள் மூலம், அன்று வரையான மாற்றங்கள் அங்கிகரிக்கப்பட்டனவாக மாற்றம் பெறுவதுடன் புதிய பிரச்சினைகளை தோற்றுவிப்பதன் மூலம் அவை மறக்கடிக்கப்படுகின்றன அல்லது மழுங்கடிக்கப்படுகின்றன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவி ஏற்று ஒரு வருடம் ஆகின்ற நிலையில், 75ஆவது சுதந்திர தினத்திற்கு முன்னதாக தீர்வு பொதி வெளியிடுகின்றேன்; சில ஆக்கபூர்வமான விடயங்களை நடைமுறைப்படுத்துகின்றேன் என்றார். நடந்ததோ வேறு. தமிழர் தாயகத்தில் மேலாதிக்க ஆக்கிரமிப்பு மனநிலையுடன் மிக மோசமாக பௌத்தமயமாக்கல் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது.

இதனை கருத்திற் கொண்டு தொல்லியல் திணைக்கள அடாவடி செயற்பாடுகள் மற்றும் பௌத்தமயமாக்கல் முற்றாக நிறுத்தப்படல், தமிழர்களின் ஆதி தமிழர் வழிபாட்டிடங்களுக்கு எந்தவித இடையூறுமின்றி வழிபடும் உரிமையை வேற்று மத பிரசன்னங்கள் இன்றி அங்கிகரித்தல், வட கிழக்கில் காணி விடுவிப்பு மற்றும் முழுமையான மீள்குடியேற்றம், தமிழ் அரசியல் கைதிகளின் நிபந்தனையற்ற விடுதலை போன்ற சமகால விடயங்களில் உடனடி தீர்வை முன்நிபந்தனையாக இம்மாதத்துக்குள் நிறைவேற்ற கோர வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.



# டொப்பாஸில் விழுந்த லொறி

■ செ.திவாகரன்

நுவரெலியா - கண்டி பிரதான வீதியில் நுவரெலியா, பம்பரகெல டொப்பாஸ் பகுதியில் லொறியொன்று செவ்வாய்க்கிழமை (09) விழுந்து விபத்துக்குள்ளானது.

குளியாப்பிட்டியவில் இருந்து நுவரெலியாவுக்கு கோழி உரத்தை ஏற்றி பயணித்த லொறியே பாரிய வளைவில் தடுப்பு வேலியையும் உடைத்துக்கொண்டு தேயிலை தோட்டத்தில் விழுந்து விபத்துக்கு உள்ளாகியுள்ளது.

இதன்போது, லொறியின் சாரதி மற்றும் அவரின் இரு உதவியாளர்களும் இருந்துள்ளனர். எனினும், அதிர்ஷ்ட வசமாக சிறு காயங்களுடன் மூவரும் உயிர் தப்பியுள்ளனர். தொழில்நுட்ப கோளாறு காரணமாகவே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

அவ்விடத்தில் இதற்கு முன்னரும் பல விபத்துகள் ஏற்பட்டுள்ளன. அதனை கருத்தில் கொண்டு அங்கு வீதி அபிவிருத்தி அதிகார சபை பாதுகாப்பு வேலிகளை அமைத்துள்ளது.

இவ்விபத்து தொடர்பில் நுவரெலியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் .

# 30 கிலோ இறைச்சி மீட்பு

■ கனகராசா சரவணன்

மட்டு. கரடியனாறு பிரதேசத்தில் இருந்து மட்டக்களப்பு நகருக்குள் சட்டவிரோதமாக ஓட்டோவில் மரை இறைச்சியை கடத்திச் சென்ற ஒருவரை திங்கட்கிழமை (08) மாலை வலையிறவு பாலத்தில் வைத்து கைது செய்துள்ளதுடன் 30 கிலோ கிராம் மரை இறைச்சியை மீட்டுள்ளதாக மட்டு. தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து ஓட்டோ வண்டியை நிறுத்தி சோதனையிட்ட போது, அதில் இருந்து 30 கிலோ கிராம் மரை இறைச்சியை மீட்டதுடன் ஒருவரை கைது செய்தனர். கடத்தலுக்கு பாவிக்கப்பட்ட ஓட்டோவும் மீட்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# ஓட்டோ விபத்து; மூவர் காயம்



■ ராமு தனராஜா

ஹப்புத்தளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ராத்கராவ பகுதியில் ஓட்டோ வண்டி விபத்துக்குள்ளானதில் இரண்டு பெண்கள் உட்பட மூவர் படுகாயம் அடைந்தனர்.

படுகாயம் அடைந்த மூவரும் பொரலந்தை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக தியத்தலாவை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

கொழும்பில் இருந்து பொரலந்தைக்கு தங்களுடைய வீட்டுக்குத் திரும்பும் போதே நேற்று (09) காலையில் 50 அடி பள்ளத்தில் விழுந்து இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இது குறித்து ஹப்புத்தளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# ஆனையிறவில் கதிர்காம பாதயாத்திரீகர்கள்

■ வி.ரி. சகாதேவராஜா

யாழ்ப்பாணம், செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து கதிர்காமம் நோக்கி புறப்பட்ட ஜெயாவேல்சாமி தலைமையிலான பாதயாத்திரை குழுவினர், செவ்வாய்க்கிழமை (09) காலை ஆனையிறவை வந்தடைந்தனர். வழமைபோல இம்முறையும் கடந்த 06ஆம் திகதி சனிக்கிழமை விசேட பூஜையுடன் ஆரம்பமாகிய இப்பாதயாத்திரை, நான்காவது நாளில் ஆனையிறவை வந்தடைந்தது.



# கற்றல் உபகரணங்கள்

■ துவாரகஷான்

பெருந்தோட்ட பகுதியில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 200 பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு ஹோல்புறூக் சிங்கள மகா வித்தியாலயத்தில் செவ்வாய்க்கிழமை (09) இடம்பெற்றது.

பசுமலை 475 கிராம சேவையாளர் பிரிவில் இயங்கும் கிராம அபிவிருத்தி சங்கத்தின் தலைவர் அநுரகுமார தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் நுவரெலியா பிரதேச செயலகத்தின் உதவி செயலாளர் கே.எச். எஸ் வீரசிங்க நுவரெலியா பிரதேச செயலகத்தின் கிராம அபிவிருத்தி சங்கத்தின் உத்தியோகஸ்தர் அநுரகுமார, கிராமசேவகர் ஆர். குழந்தைவேல், ஆக்ரா பாடசாலை அதிபர் ஆர் விநாயகமூர்த்தி, சீட்டி தொழிற்சாலை பொறியியலாளர் சேன் சேனாநாயக்க மற்றும் பாடசாலை அதிபர் ஆசிரியர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# 2 சிறுமிகள் துஷ்பிரயோகம்; பெரிய தந்தை கைது

■ எஸ்.சதீஸ்

இரண்டு சிறுமிகளை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தினார் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட, அவ்விரு சிறுமிகளின் பெரிய தந்தை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

நோர்வூட் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சாமிமலை, ஸ்டொக்கம் தோட்ட பகுதியில் 12 மற்றும் 13 வயதான இரண்டு சிறுமிகளையும் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பெரிய தந்தை, எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

ஹட்டன் நீதவான் நீதிமன்றில் சந்தேக நபரை முன்னிலைப்படுத்திய போதே, ஹட்டன் நீதவானால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இரண்டு சிறுமிகளின் தாய் வெளிநாட்டில் பணிபுரிந்து வருகின்றார். இவர்களின் தந்தை மறுமணம் முடித்துள்ளார். இந்த இரண்டு சிறுமிகளும் பெரியதந்தையின் பராமரிப்பில் வளர்ந்து வந்துள்ளனர்.

பெரிய தந்தையால் பாலியல் தொந்தரவுக்கு உட்படுத்தி வந்தமை தொடர்பில் இவ்விரு சிறுமிகளும் தமது வகுப்பாசிரியரிடம் கூறியுள்ளனர். அதனை அடுத்து பாடசாலையின் நிர்வாகத்தின் ஊடாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சட்டவைத்திய அதிகாரியின் மருத்துவ அறிக்கையை பெற்றுகொள்வதற்காக டிக்கோயா -கிளங்கன் ஆதாரவைத்திய சாலையில் இவ்விரு சிறுமிகளும் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்த நோர்வூட் பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்

# ஆணுறுப்பை காட்டிய 2 ‘குண்டா’க்கள் கைது

■ கனகராசா சரவணன்

வயோதிப பெண்ணொருவருக்கு தன்னுடைய ஆணுறுப்பை காண்பித்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ், இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் மட்டக்களப்பில் இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவிலுள்ள புதூர் பிரதேசத்தில் வாள்வெட்டுக்கு இலக்காகி வைத்தியசாலையில் இருந்து வீடு சென்ற இளைஞனின் வீட்டை, வாள்வெட்டு குழுவினர் முற்றுகையிட சென்றனர்.

அதனை தடுத்து நிறுத்திய வயோதிப பெண் ஒருவருக்கு, தனது காற்சட்டையை கழற்றி ஆணுறுப்பை காண்பித்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ், குண்டா வாள்வெட்டுக் குழுவைச் சேர்ந்த இருவரை திங்கட்கிழமை (08) கைது செய்துள்ளதாகவும் இருவர் தலைமறைவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

4 பேர் கொண்ட வாள்வெட்டு குழு, அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த 20 வயதுடைய இளைஞன் மீது கடந்த 2ம் திகதி வாள்வெட்டுத் தாக்குதல் மேற்கொண்டதில் அவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்த நிலையில், வாள்வெட்டுத் தாக்குதலுக்குள்ளான இளைஞன் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று திங்கட்கிழமை (08) வீடு திரும்பியுள்ளார். இதனையடுத்து அந்த இளைஞன் மீது தாக்குதல் நடத்த, இளைஞனின் வீட்டை குண்டா வாள்வெட்டுக் குழுவினர் முற்றுகையிட்டனர்.

இதன்போது அங்கு குண்டா குழுவினருக்கும் இளைஞனின் உறவினருக்கும் இடையே வாக்குவதம் ஏற்பட்டது. தாக்குதலுக்குள்ளான இளைஞனின் அம்மாவான 64 வயதுடைய வயோதிப பெண், வெளியில் வந்து குண்டா குழுவினரை வீட்டுக்குள் உள் நுழைய விடாது தடுத்து நிறுத்தினார்.

இந்நிலையில் குண்டாகுழுவைச் சேர்ந்த 34 வயதுடைய நபர், தனது காற்சட்டையை கழற்றி, வயோதிப பெண்ணுக்கு தனது ஆணுறுப்பை காண்பித்துள்ளனார்.

இச்சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்ட வயோதிப பெண் செய்த முறைப்பாட்டையடுத்து, தலைமறைவாகியிருந்த குண்டா வாள்வெட்டு குழுவைச் சேர்ந்தவரும் ஆண் உறுப்பை காண்பித்தவர் உட்பட இருவரை திங்கட்கிழமை இரவு பொலிஸார் கைது செய்ததுடன் அந்தக் குழுவைச் சேர்ந்த இருவர் தொடர்ந்தும் தலைமறைவாகி உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# மாணவன் மீட்பு

■ பாறுக் ஷிஹான்

பிரத்தியேக வகுப்புக்கு செல்வதாகக் கூறிச் சென்ற மாணவன் மாயமாகிய நிலையில், கொழும்பு, வெள்ளவத்தை பஸ் தரிப்பிடத்தில் இருந்து மீட்கப்பட்டுள்ளமை தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொள்ள கல்முனை தலைமையக பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

திங்கட்கிழமை (08) மாலை சகோதரியால் மீட்கப்பட்ட குறித்த மாணவன் தற்போது பாதுகாப்பாக தங்கவைக்கப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்கு கல்முனை தலைமையக பொலிஸார், வெள்ளவத்தை சென்றுள்ளனர்.

# பிள்ளைகளின் பாதுகாப்பை ஒன்றிணைந்து உறுதிப்படுத்துவோம்

யுத்தக்காலத்திலும், உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குப் பின்னரும், பாடசாலைகளில் பாதுகாப்பு கடமைகளுக்கு ஆயுதம் தரித்த பொலிஸாரும், படையினரும் நிறுத்தப்பட்டிருந்தனர். அவர்களுடன், பெற்றோர்களும், பாடசாலை சங்க உறுப்பினர்களும் காவலுக்காக நிறுத்தப்பட்டிருந்தனர்.

படையினருக்கு அது சாதாரணமானது என்றாலும், பெரும்பாலான பெற்றோர்கள், விடுமுறையை எடுத்துக்கொண்டோ அல்லது அன்றைய நாளில் வேலைக்குச் செல்லாமலோ பாடசாலைக்கு காவலுக்குச் செல்லவேண்டிய நிலைமை ஏற்பட்டிருந்தது.

பிள்ளைகள் வெவ்வேறு பாடசாலைகளில் கற்பவர்களாக இருந்தால் தாய், தந்தை இருவருக்கும் அது சிக்கலை ஏற்படுத்திருந்தது.

குண்டுவெடிக்கும்; பாடசாலை மாணவர்களை இலக்குவைத்து தாக்குதல் நடத்தப்படும் என்றிருந்த அச்சம் இன்றில்லை. எனினும், பாடசாலை மாணவர்களை கடத்தும் முயற்சி, போதைப்பொருள் விநியோகிக்கும் செயற்பாடு உள்ளிட்டவை, பெற்றோர்கள் மத்தியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

பலமுறை வலியுறுத்தியதைப் போல, கண்களுக்குள் விளக்கெண்ணெயை ஊற்றிக்கொண்டு, பிள்ளைகளை கண்காணிக்க வேண்டிய நிலைமைக்கு பெற்றோர், பாதுகாவலர்கள் தள்ளப்பட்டுள்ளனர். அந்தளவுக்கு மோசமான சம்பவங்கள் நாட்டில் இடம்பெற்றுக்கொண்டு இருக்கின்றன.

மன்னார் மாவட்டத்தில், வான்களில் சுற்றித்திரியும் இனந்தெரியாத நபர்கள், பாடசாலைக்கு தனியாகச் செல்லும் அல்லது, வீடு திரும்பும் மாணவர்கள், மாணவிகளுக்கு இனிப்பு வழங்கி, கடத்துவதற்கு முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்.

அதுவும் குறுக்கு வீதிகள் அல்லது, ஆள் நடமாட்டம் இல்லாத வீதிகளில் வைத்தே, மாணவர்கள் சிலரை கடத்துவதற்கு இவர்கள் முயன்றுள்ளனர் என்பது கண்டறியப்பட்டுள்ளது. அதன்பின்னர், மன்னார் மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளுக்கு வெளியே, ஆயுதம் தரித்த படையினரும் பொலிஸாரும் செவ்வாய்க்கிழமை (09) முதல் நிறுத்தப்பட்டுள்ளனர்.

வடக்கு, கிழக்கு மாகாணத்தை பொறுத்தவரையில், படையினர் ஆயுதம் தரித்துநிற்பது ஒன்றும் புதிதல்ல. எனினும், பாடசாலைகளுக்கு வெளியே நிற்பது, மாணவர்களின் மத்தியில் ஓரளவுக்கு அச்சத்தை ஏற்படுத்தும். கற்றலில் முறையாக கவனத்தை செலுத்தமுடியாத நிலைமை ஏற்படும்.

பாடசாலைக்கு செல்லும் அல்லது வீடு திரும்பும் வழியில்தான் இவ்வாறான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதால், ரோந்து சேவையை முன்னெடுப்பதே பொருத்தமானதாக இருக்கும். இதேநேரத்தில், தங்களுடைய பிள்ளைகளைப் பாதுகாத்துக்கொள்ளும் நோக்கில் சிலர், பாடசாலைகளுக்கே அனுப்பாமல் வீட்டிலிலேயே வைத்துக்கொள்ளவும் முயலுவர்.

கடத்தலில் ஈடுபடும் கும்பலை கண்டறிய வேண்டும். அவர்களின் நோக்கத்தை இனங்காண வேண்டும். வீட்டுக்கு வெளியே செல்லும் போது, யார், எதைக் கொடுத்தாலும் சாப்பிடவோ, நுகர்ந்து பார்க்கவோ கூடாதென தங்களுடைய பிள்ளைகளுக்கு அறிவுரை கூறவேண்டும்.

பாடசாலைகளுக்குச் செல்லும்போதும், வீடு திரும்பும்போதும், ஐந்தாறு பேர் கூட்டமாக செல்வதை பழக்கப்படுத்திக் கொள்ளவேண்டும். சந்தேகத்துக்கு இடமான நபர்களின் நடமாட்டத்தை அவதானித்தால் அறிவிக்கவேண்டும்.

வீதியோரங்களில் நிறுத்தப்பட்டிருக்கும் வாகனங்களுக்கு அண்மையில் செல்லக்கூடாது உள்ளிட்டவை, முக்கியமான ஆலோசனைகளாகும்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk

## வாழ்வியல் தரிசனம்

இந்த தேகம் வலுவானது! இதனுள் இருக்கும் உயிர் என்னை விட்டுப் போகாது. நானே பெரியவன். எனக்குள் செல்வம், பலமிக்கப் பதவி எல்லாமே இருந்தபடியே இருக்கும் என எண்ணுவதுடன், என்னை அழிக்க யார் இருக்கின்றார்கள் எனச் சொல்பவர்கள், இரண்டு நாள்கள் காய்ச்சலால் பாதிக்கப்பட்டால் சோர்ந்து, தடுமாறி விடுகின்றார்கள்.

ஆயினும், இந்த நோய் குணமானதும் இந்த மனிதன் மீண்டும் வீரம்பேச ஆரம்பிக்கின்றான். இதுதான் மானுட வாழ்க்கை.

வாழ்க்கையை முறையாக வாழாதுவிட்டால் அவன் பலவீனமான மனிதான் தான்! எவ்வளவு சொத்து, சுகம், கல்வி, செல்வாக்குகள் இருந்தாலும் சொந்த வாழ்க்கை அவனுக்கு வெறும் பூஜ்யம். உயிர் என்பதே, எப்போழுதும் விலகி ஓடிவிடும் எனத் தெரியாமல் வாழும் அறிவிலிகளே அநேகர்.

பொய்மைக்கு வெள்ளை அடித்திட முடியாது. பகட்டான வாழ்வில் உண்மையைத் தேட முடியாது. அருவ வாழ்வில் உலகைக் காண முடியாது. பரந்த உலகில் நானும் ஒரு மனிதன்; ஆத்ம சமத்துவமே முழுமை தரும்.

– பருத்தியூர் பாலவயிரவநாதன்

# மறதியின் பின்னால் பதுங்க முனையும் அரசியல்வாதிகள்



எம்.எஸ்.எம். ஐயூப்

ஒரு நாள், முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தன இலங்கை சட்டக் கல்லூரியில் ஜனநாயகத்தைப் பற்றிய தலைப்பொன்றின் கீழ் சிறப்புரையாற்றிக் கொண்டு இருந்தார். கட்டுரையாளரும், 'தினபதி' நாளிதழுக்காக அந்தக் கூட்டத்தை அறிக்கையிடுவதற்காக அங்கு சென்றிருந்தார்.

அப்போது, தமிழ் முதியவர் எழுந்திருந்து, "ஐயா! நீங்கள் ஜனநாயத்தைப் பற்றி அருமையாக உரையாற்றினீர்கள். ஆனால், உங்கள் ஆட்சியின் கீழ், தமிழர்களான எமது ஜனநாயகம் பறிக்கப்பட்டதை நான் இங்கு குறிப்பிட வேண்டும். 1983ஆம் ஆண்டு தமிழர்களுக்கு எதிரான வன்செயல்களின் போது, உங்களது பாதுகாப்பு படையினரின் கண்முன்னேயே எனது வீடு தாக்கப்பட்டு எரிக்கப்பட்டது. எங்களுக்கு இது வரை நீதி வழங்கப்பட்வில்லை" என்றார்.

அதற்கு ஜே.ஆர் வழங்கிய பதிலோடு, சபையோர் குலுங்கிகுலுங்கி சிரிக்கலாயினர். பாரதூரமான பார்வையோடு அந்த முதியவரை நோக்கிய ஜனாதிபதி, "1983 ஆம் ஆண்டிலா...? அந்த ஆண்டில் நானா ஜனாதிபதியாக இருந்தேன்? பண்டாரநாயக்க அம்மையார் இல்லையா" என்று கேட்டதே, சபையை சிரிக்க வைத்தது.

இலங்கை வரலாற்றையே மாற்றிய 1983ஆம் ஆண்டில் ஜனாதிபதியாக இருந்தவருக்கு, தாம் அந்த ஆண்டில் நாட்டுக்கு தலைமை தாங்கியமை மறந்து போவதாக இருந்தால், அதனை எவ்வாறு விவரிக்கலாம்?

உண்மையிலேயே ஜே.ஆர் அதனை மறந்தாரா இல்லையா என்பதைவிட, அந்த முதியவரின் கேள்விக்கு திருப்திகரமான பதிலை வழங்க ஜே.ஆரால் முடியாது. 1983ஆம் ஆண்டு, தமிழருக்கு எதிரான தாக்குதல்களை அரசாங்கம் நினைத்திருந்தால் நிறுத்தி இருக்கலாம். இல்லாவிட்டால், அத்தாக்குதல்களை நாடெங்கிலும் பரவாதிருக்கும் வகையில் கட்டுப்படுத்தி இருக்கலாம். அந்த இரண்டையும் அரசாங்கம் செய்யவில்லை.

கலவரத்தின் நான்காவது நாளில், நாட்டு மக்களுக்கு உரையாற்றிய ஜனாதிபதி, தாக்குதல்களை நடத்தும் காடையர்களை சாடாது, தமிழ்த் தலைவர்களையே சாடிப் பேசினார். அதனால், ஐந்தாவது நாள் தாக்குதல்கள் மிகவும் பயங்கரமாகின.

அவரது கட்சியான ஐக்கிய தேசிய கட்சியைச் சேர்ந்தவர்கள், வாக்காளர் இடாப்புகளை கையில் வைத்துக்கொண்டே, கொழும்பில் தமிழர்களின் வீடுகளை அடையாளம் கண்டு, அவற்றை தாக்கினர் என்பது பின்னர் தெரிய வந்தது. எனவே தான் ஜே.ஆர், தாம் ஜனாதிபதியாக இருந்ததையும் மறந்ததைப் போல் நடித்தார்.

தமக்கு சாதகமான முறையில், பல விடயங்களை மறந்து விடுவதை (மறந்ததைப் போல் நடிப்பதை) எப்போதும் அரசியல்வாதிகளிடம் காணலாம். 75 ஆவது சுதந்திர தினத்துக்கு முன்னர், இனப் பிரச்சினையை தீர்ப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த நவம்பர் மாதம் வரவு-செலவு திட்ட விவாதத்தின் போது கூறினார். அதன்படி, டிசெம்பர் 13ஆம் திகதி 'சர்வ கட்சி' கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை காண்பதற்கு முன்னர், அரசியலமைப்பின் 13ஆவது திருத்தை முழுமையாக நிறைவேற்ற வேண்டும் என்று தமிழ்க் கட்சிகள் அந்தக் கூட்டத்தின் போது கோரின. ஜனாதிபதி அதனை ஏற்றுக் கொண்டார். ஆனால், ஜனவரி மாதம் ஆரம்பத்தில் ஜனாதிபதி பொறுப்பேற்ற விடயங்களை செய்யவில்லை என்று, தமிழ் கட்சிகள் ஒதுங்கிக்கொண்டன.

அதையடுத்து ஜனவரி 15ஆம் திகதி, யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தேசிய தைப் பொங்கல் விழாவின் போது உரையாற்றிய ஜனாதிபதி, இரண்டு வருடங்களில் அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நிறைவேற்றுவதாக கூறினார்.

சுதந்திர தினத்துக்கு முன்னர், இனப்பிர்சினையை தீர்ப்பது போன்ற நடைமுறைச் சாத்தியமற்ற வாக்குறுதிகளை வழங்குவதைப் பார்க்கிலும், இது ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்தது. ஆனால், சுதந்திரதினத்துக்கு முன்னர் இனப் பிரச்சினையை நிறைவேற்றுவதாக தாம் அளித்த வாக்குறுதியை அவர் மறந்து இருந்தார் என்பதும் அதன் மூலம் தெரிகிறது.

இப்போது, அவர் இரண்டு வருடத்தில் அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவதென்ற வாக்குறுதியையும் மறந்துவிட்டார் போலும்! சுகததாஸ உள்ளரங்கில் நடைபெற்ற ஐ.தே.கவின் இவ்வருட மே தினக் கூட்டத்தில், 'சூம்' தொழில்நுட்பம் ஊடாக உரையாற்றிய அவர், இவ்வருட இறுதியில் இனப் பிரச்சினையை தீர்க்க, உடன்பாடுகளை செய்துகொள்வதாக கூறினார். அத்தோடு அதைப் பற்றி பேச்சுவார்த்தை நடத்த வருமாறு, தமிழ்க் கட்சித் தலைவர்களை அழைத்த வண்ணமே இருக்கிறார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன, மறதி என்ற விடயத்தில் ஜே.ஆரையும் மிஞ்சிவிடும் போல் தெரிகிறது. கடந்த வருடம் மக்கள் வீதிகளில் இறங்கி போராட்டம் நடத்திய காலத்தில் பதுங்கி இருந்த அவர்கள், இப்போது வெளியே வந்து மேடைகளில் நடத்தும் பேச்சுகளை கேட்கும் போது, கடந்த மூன்று வருடங்களாக தமது அரசாங்கமே நாட்டில் இருக்கிறது என்பதையும் மறந்துவிட்டார்கள் என்றே எண்ணத் தோன்றுகிறது. தாம் பதவியில் அமர்த்திய ஜனாதிபதி கோட்டாபயவின் அரசாங்கம் எவ்வாறு கவிழ்ந்தது என்பதையும் அவர்கள் மறந்துவிட்டார்கள் போலும்!

எனவே, சதிகள் மூலம் கோட்டாவின் அரசாங்கம் கவிழ்ந்ததாக பொதுஜன பெரமுனவின் தலைவர்கள் கதைகளை கூறித் திரிகின்றனர். புலிகள் தோல்வியடைந்தது முதல், தொடர்ந்த ஒரு சதியின் விளைவாகவே கோட்டாவின் அரசாங்கம் கவிழ்க்கப்பட்டது என்று முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ கூறியிருந்தார்.

அவரது அந்த உரையை அடுத்து, மஹிந்தானந்த அலுத்கமகே, ஜொன்ஸ்டன் பெர்னாண்டோ போன்ற பொதுஜன பெரமுனவின் தலைவர்களும் மே தினக் கூட்டத்தின் போது, இதே கருத்தை வெளியிட்டு இருந்தனர்.

ஆனால், அவர்கள் அந்தச் சதியை விவரிக்கவில்லை. தமது முதல் உரையை அடுத்து, முகநூல் மூலமான நேரடி கலந்துரையாடல் ஒன்றின் போதும் நாமல் இந்தச் சதிக் கதையை கூறினார். ஆயினும் அவர் அப்போது, புலிகளைப் பற்றிக் குறிப்பிடவில்லை. மூன்றாம் தரப்பு என்றே குறிப்பிட்டார்.

கடந்த வருடம் அரசாங்கத்துக்கு எதிரான மக்கள் போராட்டத்தை அடுத்து, அந்த போராட்டத்தைப் பற்றி தமக்கு எந்தவொரு பிரச்சினையும் இல்லை என்றும் போராட்டக்காரர்களைப் பற்றியே தமக்கு பிரச்சினை என்றே, நாமல் கூறியிருந்தார். இப்போது அந்தப் போராட்டமே சதியாக மாறியிருக்கிறது.

இவர்கள் இப்போது தெரிவிக்கும் கருத்துகளின் படி, தமது விவசாயம் உரமின்றி அழிந்த போதும், எதிர்த்து போராட விவசாயிகள் நினைக்கவில்லை. ஏதோ ஒரு சதியின் காரணமாகவே அவர்கள் உரம் கேட்டு ஆர்ப்பாட்டம் நடத்தி இருக்கிறார்கள். எரிபொருட்களுக்காகவும் எரிவாயுவுக்காகவும் நாட்கணக்கிலும் மைல் கணக்கிலும் நீண்ட வரிசைகள் இருந்தும், நாளொன்றுக்கு 13 மணித்தியால மின்வெட்டு அமலாகி, தமதும் தமது பிள்ளைகளினதும் வாழ்க்கையையே சீர்குலைத்த போதிலும் மக்கள் கோபப்படவில்லை; விலைவாசி நான்கு மடங்காக உயர்ந்த போதிலும் மக்கள் அவற்றை பொருட்படுத்தவில்லை. ஒரு சதியின் காரணமாகவே அவர்கள் வீதியில் இறங்கி போராடி இருக்கிறார்கள். எவ்வளவு விரைவாகவும் இலகுவாகவும், இந்த அரசியல்வாதிகள் அந்த நெருக்கடி நிலையை மறந்துவிட்டார்கள்?

அந்த மக்கள் போராட்டத்துக்கு காரணமான பொருளாதார நெருக்கடி இன்னமும் தீரவில்லை. அந்த நெருக்கடியை சமாளிக்க கடந்த வருடம் அரசாங்கம், மேற்கு ஆசிய முஸ்லிம் நாடுகளின் உதவியை நாடிய போதிலும் எந்தவொரு நாடும் பெரிதாக உதவ முன்வரவில்லை.

அந்த நிலையில், கடந்த டிசெம்பர் மாதம் பாராளுமன்றத்தில் உரையாற்றிய வெளிநாட்டமைச்சர் அலி சப்ரி, கொவிட் - 19 நோயால் மரணித்த முஸ்லிம்களின் சடலங்களை எரித்தமையே, அதற்குக் கரணம் என்றார். அந்தத் தகன முடிவை அப்போதைய முழு அமைச்சரவையும் எதிர்த்ததாகவும், நீரால் வைரஸ் பரவுவதில்லை என்று, உலக சுகாதார அமைப்பு கூறியிருந்த நிலையிலும், அந்த விடயத்தை ஆராய்ந்த குழுவின் உறுப்பினரான ஒரு பெண் மருத்தவ நிபுணரே அந்த முடிவில் உறுதியாக இருந்ததாகவும் குற்றம் சாட்டினார்.

கடந்த வாரம் இந்த விடயம் மீண்டும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமால் எழுப்பப்பட்டது. அப்போது அதற்கு பதிலளித்த சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லயும் ஒரு பெண் மருத்துவ நிபுணரே அதற்குக் காரணம் என்றார். அந்த பெண் நிபுணர் இந்த விடயத்தில் பிடிவாதமாக இருந்தமை உண்மை தான். ஆனால், முழு அமைச்சரவையும் அதனை எதிர்த்ததாக அமைச்சர் சப்ரி கூறுவது உண்மையல்ல!

சமயப் போதனைகளின்படி, சுகாதார விடயங்களின் போது முடிவு எடுக்க முடியாது என்று அப்போதைய சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னிஆரச்சி பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது பலாத்கார தகனத்தை நியாயப்படுத்தினார். தொலைக்காட்சி கலந்துரையாடல் ஒன்றின் போது, மஹிந்தானந்த அலுத்கமகேயும் அதனை நியாயப்படுத்தினார்.

விமல், கம்மன்பில் ஆகியோர் உள்ளிட்ட அமைச்சர்கள் அப்போது என்ன கூறினார்கள் என்பதை பழைய பத்திரிகைகளை புரட்டிப் பார்த்தால் விளங்கும். தாமே அவற்றை மறந்துவிட்டா அல்லது மக்கள் அவற்றை மறந்துவிட்டார்கள் என்று நினைத்தா சப்ரியும் ரம்புக்வெல்லயும் ஒரு பேராசிரியரே தகன முடிவுக்குக் காரணம் என்கிறார்கள்?

பொருளாதார நெருக்கடியைப் பற்றியோ அல்லது தாம் எடுத்த இனவாத முடிவுகளைப் பற்றியோ பொறுப்பை ஏற்காது, அவற்றைப் பற்றி கட்டுக்கதைகளை கூறும் அரசியல்வாதிகள் மீண்டும் அது போன்ற முடிவுகளை எடுக்க மாட்டார்கள் என்பதற்கு எந்தவோர் உத்தரவாமும் இல்லை.

## கடிதங்கள்

### பொத்துவிலில் ஒசுசலவை திறக்குமாறு

## பொது மக்கள் கோரிக்கை

பொத்துவில் நகரில், அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் (ஒசுசல) கிளை ஒன்றைத் திறக்குமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பொத்துவில், லாகுகல, பாணம, கோமாரி போன்ற பிரதேசங்களில் சுமார் 70 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மூவின மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்குத் தேவையான மருந்து வகைகளை பெருமளவில் தனியார் மருந்து விற்பனை நிலையங்களிலேயே கொள்வனவு செய்து வருகின்றனர்.

அரசாங்கத்தின் ஒசுசல கிளை இல்லாமையால் தமக்குத் தேவையான மருந்துகளை பெற்றுக் கொள்வதில், பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக சுட்டிக்காட்டியுள்ளனர்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதோடு, அவசரத் தேவைகளுக்கு மருந்துகளை பெற்றுக் கொள்ள முடியாத நிலையும் எற்பட்டுள்ளது.

நோயாளிகள் ஒசுசலவில் மருந்தைக் கொள்வனவு செய்வதற்கு சுமார் 40 கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள அக்கரைப்பற்று, நிந்தவூர் ஆகிய பிரதேசங்களுக்குச் செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் நோயாளர்கள் பல அசௌகரியங்களை எதிர்கொள்வதோடு, பொருளாதார ரீதியாக பாதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த காலங்களில் பல கோரிக்கைகள் விடுக்கப்பட்டிருந்தும் பொத்துவில் பிரதேசத்தில் ஒசுசல கிளை இதுவரை திறக்காமையையிட்டு மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

–எம்.எஸ்.எம் ஹனீபா

# மே 10 தீ பற்றியிருக்கும்

மே 10 ஆம் திகதி ஐக்கிய மக்கள் சக்தியின் அரசியல்வாதிகள், அரச தரப்பு அரசியல்வாதிகள் உள்ளடங்கலாக 100 அரசியல்வாதிகளின் சொத்துகள் மற்றும் வீடுகளை தீக்கிரையாக்க ஒரு தரப்பினர் பட்டியல் தயாரித்திருந்த நிலையில், இராணுவத்துக்கு வழங்கப்பட்ட துப்பாக்கி சூடு நடத்தும் அதிகாரத்தாலேயே நாடு தீப்பற்றி எரியாதிருந்தது என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாராளுமன்றம் செவ்வாய்க்கிழமை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியபோது, 2022 மே 9 ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட அரசாங்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் அதன் தொடர்ச்சியான வன்முறைகள் என்பன இடம்பெற்று ஒரு வருட காலம் நிறைவடைந்ததை சுட்டிக்காட்டி, ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வாதப்பிரதி வாதங்களில் ஈடுபட்டனர்.

பொதுஜன பெரமுன அரசாங்கத்தின் முறையற்ற செயற்பாட்டால், மே 9 மக்கள் போராட்டம் தோற்றம் பெற்று பாரிய விளைவுகளை ஏற்படுத்தியது என எதிர்க்கட்சியினர் கூறினர்.

ஆனால், எதிர்க்கட்சிகளின் ஆதரவுடன் மே 9 பயங்கரவாத சம்பவம் இடம்பெற்றது. பாதிக்கப்பட்டவர்களுக்கு இதுவரை நீதி கிடைக்கவில்லை என அரச தரப்பினர் குற்றம்சாட்டினர்

இந்த வாதப்பிரதிவாதங்களின் போதே, இவ்வாறு தெரிவித்த நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும்



அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ மேலும் பேசுகையில்,

மே 9 காலி முகத்திடல் சம்பவத்தை தொடர்ந்து, அரசியல்வாதிகளின் வீடுகள் மற்றும் சொத்துகளை அழிக்க ஒரு தரப்பினர் தீர்மானித்து, அர சியல்வாதிகளின் பெயர் பட்டியலை தயாரித்துள்ளதாக தகவல் கிடைத்தது.இதனை அப்போதைய ஜனாதிபதி கோட்டாபயவுக்கு அறிவிக்க பலமுறை முயன்றேன். இருப்பினும் அது பயனளிக்கவில்லை.

மே 10 ஆம் திகதி, ஐக்கிய மக்கள் சக்தியின் அரசியல்வாதிகள் உட்பட அரச தரப்பு அரசியல்வாதிகள் உள்ளடங்கலாக 100 அரசியல்வாதிகளின் சொத்துகள் மற்றும் வீடுகளை தீக்கிரையாக்க ஒருதரப்பினர் தீர்மானித்திருந்தனர். இவ்விடயம் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருடன் பேசினேன்.

நாட்டின் சட்டம் ,ஒழுங்கை பாதுகாக்க துப்பாக்கி பிரயோகம் செய்யும் அதிகாரம் அப்போது இராணுவத்துக்கு வழங்கப்பட்டது. கலவரத்தை ஏற்படுத்தும் வகையில் செயற்படுபவர்களுக்கு எதிராக கடுமையாக செயற்பட அனுமதி வழங்கப்பட்டது. ரத்கம, அங்கொட, புறக்கோட்டை ஆகிய பகுதிகளில் மூன்று துப்பாக்கி சூடுகளை இராணுவத்தினர் மேற்கொண்டார்கள்.

இராணுவத்தை களமிறக்கி, அவர்களுக்கு துப்பாக்கி பிரயோகம் செய்யும் அதிகாரம் வழங்காமல் இருந்திருந்தால் மே 10, நாடு முழுவதும் தீ பற்றியிருக்கும் என்றார்.

# ஒரு நிமிட மௌனம்

2022 மே 9 ஆம் திகதி, இடம்பெற்ற வன்முறைகளின் போது கொல்லப்பட்ட ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொலன்னறுவை மாவட்ட எம்.பியான அமரகீர்த்தி அத்துகோரல உயிரிழந்து ஒருவருடம் பூர்த்தியாகியுள்ளதை முன்னிட்டு, பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (09) அவருக்கு ஒரு நிமிட மௌனஅஞ்சலி செலுத்தப்பட்டது.





நிமல் லான்சா எம்.பி விடுத்த கோரிக்கைக்கு அமைய, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன இணங்கியதை அடுத்து, கட்சி வேறுபாடின்றி அனைத்து எம்.பிக்களும் எழுந்து நின்று மௌன அஞ்சலி செலுத்தினர்.

# ஜீ.எஸ்.பி வரிச் சலுகையை இழக்க நேரிடும்

## ஹர்ஷ டி சில்வா எச்சரிக்கை

"பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை நீக்கிக்கொள்ள நடவடிக்கை எடுக்காவிட்டால் ஜீ.எஸ்.பி வரிச் சலுகையை இலங்கை இழக்க நேரிடும்" என்று எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஏற்றுமதி அபிவிருத்தி சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே ஹர்ஷ டி சில்வா இதனை தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், ஏற்றுமதியை அதிகரிக்க வேண்டும் என்று இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டி அடிக்கடி கூறுகின்றார். இந்நிலையில் ஜீ.எஸ்.பி பிளஸ் 2023 டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைகின்றது என்பதனை பலர் அறியாது இருக்கின்றனர். ஐரோப்பிய ஒன்றியத்தால் பாகிஸ்தான், இலங்கை உள்ளிட்ட 6 நாடுகளுக்கு மீண்டும் விண்ணப்பிக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றிய பிரகடனத்தில் பல்வேறு விடயங்கள் தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளன. அதில் அடிப்படை உரிமைகள், தொழிலாளர் உரிமைகள், நல்லாட்சி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகிய விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

அதில் வாக்குரிமை முக்கியமானதாக உள்ளது. இதனால் இங்கே வாக்குரிமையை மக்களுக்கு வழங்க வேண்டும். இதேவேளை பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தொடர்பில் குறிப்பிட வேண்டும். அந்தச் சட்டமூலத்தை நீக்கிக்கொள்ளாவிட்டால் ஒருபோதும் ஜீ.எஸ்.பி வரிச் சலுகை கிடைக்கப் போவதில்லை. இந்த நாட்டு மக்களுக்கு தமது மனதில் உள்ள விடயங்களை வீதிக்கு வந்து முன்வைப்பதற்கு உரிமை உள்ளது. இவ்வாறான நடவடிக்கைகளை பயங்கரவாத செயற்பாடுகளாக கருதி உத்தரவுகளை போடுவதை ஐரோப்பிய ஒன்றியம் ஏற்றுக்கொள்ளாது என்றார்.

# நியூ டயமண்ட், எக்ஸ்பிரஸ் பேர்ள் விவகாரத்தில் சர்ச்சை



இலங்கை கடற்பரப்பில் இடம்பெற்ற 'நியூ டயமண்ட்', 'எக்ஸ்பிரஸ் பேர்ள்' விபத்துகள் தொடர்பான உண்மைகளை ஆராய்ந்து தேவையான பரிந்துரைகளை வழங்குவதற்கு அரசாங்க கட்சி மற்றும் எதிர்க்கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் 15 பேர் கொண்ட பாராளுமன்ற தெரிவுக்குழுவை உடனடியாக நியமிக்குமாறு அரசாங்க கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் 21 பாராளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

மேலும் இது குறித்து கையெழுத்திட்ட கடிதமொன்றும் நேற்று செவ்வாய்க்கிழமை , சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தனவிடம் கையளிக்கப்பட்டது.

ஜயந்த கடகொட, சஞ்சீவ எதிரிமான்ன, யதாமினி குணவர்தன, டபிள்யூ.டி.வீரசிங்க, ரஞ்சித்பண்டார, மதுர விதானகே, ராஜிகா விக்கிரமசிங்க, குணதிலக்க ராஜபக்ஷ, குமாரசிறி ரத்நாயக்க, ஜகத் குமார, மஹிந்தானந்த அலுத்கமகே, சம்பத் அத்துகோரல, நாலககொடேகொட, சுதர்சன தெனிபிட்டிய, கே.ஏ.யு.கே. குணதிலக, நிமல் லான்சா, எச்.எம்.எம் ஹரீஸ், சரத் வீரசேகர, முதித டி சொய்சா, எஸ்.பி.திஸாநாயக்க, பிரதீப் உந்துகொட ஆகிய பாராளுமன்ற உறுப்பினர்கள் இது தொடர்பான கடிதத்தில் கையொப்பமிட்டுள்ளனர்.

கப்பல் விபத்துகள் மற்றும் விபத்துகளின் பின்னர் ஏற்பட்ட தலையீடுகள் மற்றும் குறைபாடுகள் குறித்து சமூகத்தில் பெரும் விவாதங்கள் இடம்பெற்று வருவதாகவும் குறித்த கடிதத்தின் மூலம் பாராளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இவ்வாறானதொரு பின்னணியில் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் இந்த விபத்துகள் மற்றும் கப்பல் காப்புறுதி நிறுவனங்களுக்கிடையே இடம்பெற்ற பரிவர்த்தனைகள் குறித்து சபைக்கு உள்ளேயும் வெளியேயும் வெளிப்படுத்தியதாக அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கப்பல் விபத்துகள் தொடர்பான உண்மைகள் வெளிவர வேண்டியிருப்பதால், இது தொடர்பில் விசேட பாராளுமன்ற தெரிவுக்குழுவை நியமித்து, விசாரணை நடத்த வேண்டும் என அரசாங்க கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள், சபாநாயகரிடம் கையளிக்கப்பட்ட கடிதத்தில் மேலும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த ஆளும் கட்சியின் பிரதம அமைப்பாளர் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, "கப்பல் விபத்துகள் தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள நிதிக் குற்றச்சாட்டை அடக்கும் நோக்கில், எதிர்க்கட்சிகள் விவாதம் கோருகின்றன. எதிர்க்கட்சிகளின் முயற்சிகளை முறியடிக்கும் நோக்கில், அரசாங்க கட்சி இந்த விசேடதெரிவுக்குழுவை நியமிக்குமாறு சபாநாயகரிடம் கோரவுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

கப்பல் விபத்துகள் தொடர்பில் கருத்து தெரிவித்த நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, இதில் நிதி மோசடிகள் இடம்பெற்றுள்ளதாக அண்மையில் பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# தலைவராக ஏன் நியமிக்க முடியாது?

## ஹர்ஷ டி சில்வா கேள்வி

தற்போது பாராளுமன்ற நிலையியல் கட்டளைக்கு அமைய, அரசாங்க நிதி தொடர்பான தெரிவுக் குழுவின் தலைவராக என்னை ஏன் நியமிக்க முடியாது?அதற்கான காரணம் என்னவென ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பியான கலாநிதி ஹர்ஷ டி சில்வா சபாநாயகரிடம் கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடிய நிலையில், விசேட கூற்றை முன்வைத்து இவ்வாறு கேள்வி எழுப்பிய ஹர்ஷ டி சில்வா எம்.பி மேலும் கூறுகையில், 2020 ஆம் ஆண்டு அரசாங்க நிதி தொடர்பான பாராளுமன்ற தெரிவு குழுவுக்கு எனது பெயர் பரிந்துரைக்கப்பட்டது. பாராளுமன்ற நிலையியல் கட்டளையின் ஏற்பாடுகளை திருத்தம் செய்து, நீங்கள் அரசாங்க கட்சி உறுப்பினரை தெரிவு குழுவுக்கு தலைவராக நியமித்தீர்கள் என்றார்.

இதன் போது குறுக்கிட்ட சபாநாயகர், "நிலையியல் கட்டளையில் நான் மாற்றம் ஏற்படுத்தவில்லை. தெரிவு குழுவின் கூட்டத்தின் தீர்மானத்துக்கு அமையவே, அரசாங்க நிதி தொடர்பான தெரிவு குழுவின் தலைவர் நியமிக்கப்பட்டார்" என்றார்.

தொடர்ந்து உரையாற்றிய ஹர்ஷ டி சில்வா, நீங்களே பாராளுமன்றத்தின் சபாநாயகர். ஆகவே நீங்களே பொறுப்புக் கூற வேண்டும். பாராளுமன்ற நிலையியல் கட்டளையில், அரச நிதி தொடர்பான தெரிவுக்குழுவின் தலைவர் பதவி, எதிர்க்கட்சிக்கு வழங்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும், எதிர்க்கட்சிக்கு தலைவர் பதவி வழங்கப்படவில்லை.நிலையியல் கட்டளைக்கு முரணாக, தலைவர் பதவி அரச தரப்புக்கு வழங்கப்பட்டது.

வரி கொள்கை தொடர்பில் அரசாங்கம் எடுத்த தீர்மானங்கள், அரச நிதி தொடர்பான தெரிவு குழுவில் ஆராயப்படவில்லை. அரசாங்கம் விரும்பிய வகையில், வரி சலுகை வழங்கியது. இறுதியில் நாடு வங்குரோத்து நிலை அடைந்தது. நாடு வங்குரோத்து அடைந்ததன் பின்னர், அரச நிதி தொடர்பான தெரிவுக்குழுவின் தலைவராக நான் நியமிக்கப்பட்டேன். குறுகிய காலத்துக்குள் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தினேன். முதலீட்டு ஊக்குவிப்பு சபையின் தலைவரை தெரிவுக்குழுவுக்கு அழைத்து விசாரணை செய்தோம். தனியார் நிறுவனம் ஒன்றுக்கு 16 வருடங்கள் வரி சலுகை வழங்கப்பட்டமை வெளிப்படுத்தப்பட்டது. எனது செயற்பாட்டின் காரணமாக, பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமை மீறப்பட்டு உள்ளதாக தெரிவு குழு உறுப்பினர் ஒருவர் பாராளுமன்றத்தில் உரையாற்றினார்.

எதிர்க்கட்சியினர் எனது பெயரை பரிந்துரைத்த பின்னணியில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் மயந்த திஸாநாயக்கவின் பெயரை பரிந்துரைத்து அவரை, அரச நிதி தெரிவுக் குழுவின் தலைவராக நியமித்தனர். இந்த விடயத்தில் சபாநாயகர் மயந்த திஸாநாயக்கவுடன் தொலைபேசியில் உரையாடியது முறையற்றது.

முறையான தகுதிகள், எதிர்க்கட்சிகளின் பரிந்துரை உள்ள நிலையில், அரசாங்க நிதி தொடர்பான தெரிவு குழுவின் தலைவராக ஏன் என்னை நியமிக்க முடியாது? அதற்கான காரணம் என்ன என சபாநாயகரிடம் கேள்வி எழுப்பினார்.

அதன்போது உரையாற்றிய சபாநாயகர் "அது எனக்கு தெரியாது. தெரிவுக் குழுவே தலைவரை நியமிக்க வேண்டும். இவ்விடயத்தில் நான் தெரிவுக் குழுவுக்கு தலைமை தாங்கும் அதிகாரம் உள்ளதே தவிர, தலைவரை நியமிக்க அதிகாரமில்லை" என பதிலளித்தார்.




# அமைச்சரவை தீர்மானங்கள் சில..

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் திங்கட்கிழமை (08) இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகளில் சில..

### 01. வர்த்தக ஒப்பந்தம்

இலங்கை - தாய்லாந்து உத்தேச வர்த்தக ஒப்பந்தம் பற்றிய நான்காவது சுற்று கலந்துரையாடல் 2023.03.27 ஆம் திகதி தொடக்கம் 29 ஆம் திகதி வரை கொழும்பில் நடைபெற்றதுடன், 2024ஆம் ஆண்டில் முதலாம் காலாண்டில் பேச்சுவார்த்தைகளைப் பூர்த்தி செய்து, இருதரப்பினரும் கையொப்பமிடுவதற்காக குறித்த ஒப்பந்தத்தை தயார் செய்வதற்கும், அடுத்த கட்டப் பேச்சுவார்த்தை 2023.06.27, 28ஆம் திகதிகளில் கொழும்பில் நடத்துவதற்கு இருதரப்பும் உடன்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 02. நடைமுறைப்படுத்தல்

சமூகத்தில் மிகவும் இடர்களுக்கு ஆளாகக் கூடிய குழுக்களைப் பாதுகாப்பதற்காக பலம்வாய்ந்த சமூகப் பாதுகாப்பு வலையமைப்பை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான படிமுறைகளை மேற்கொள்வது, சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன்வசதி நிகழ்ச்சித்திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ள செயற்பாடுகளில் முதன்மையான செயற்பாடாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

அதற்கமைய, திட்டமிடப்பட்டுள்ள சமூகப் பாதுகாப்புக் கருத்திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக 200 மில்லியன் அமெரிக்க டொலர் கடன்தொகையை வழங்குவதற்கு உலக வங்கி உடன்பாடு தெரிவித்துள்ளது. இலக்காகக் கொள்ளப்பட்ட குடும்பங்களுக்கு நிதி நிவாரணம் வழங்கல், வறுமை மற்றும் இடர்களுக்கு ஆளாகின்றவர்களுக்கு வாய்ப்புகளை மேம்படுத்துகின்ற முன்னோடி வேலைத்திட்டம் மற்றும் சமூகப் பாதுகாப்பு முறைமையை பலப்படுத்தல் போன்ற மூன்று (03) கூறுகளின் கீழ் உத்தேசக் கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

### 03. விடுதி வசதிகள்

நாடளாவிய ரீதியில் அரச மருத்துவமனைகளில் கட்டணம் செலுத்தும் நோயாளர் விடுதி வசதிகள் விரிவாக்கம் செய்யப்படவுள்ளன. அரச சுகாதார சேவைகள் முறைமையில் மேலதிக வசதிகளுக்குப் பதிலாக தனிப்பட்ட ரீதியாக கட்டணம் செலுத்தி குறித்த வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஒருசில பிரஜைகள் விருப்பத்துடன் உள்ளனர். அதற்கமைய, இலங்கை பிரஜைகளுக்கும் வெளிநாட்டவர்களுக்கும் அரச மருத்துவமனைகளில் கட்டணம் செலுத்தும் நோயாளர் விடுதி வசதிகளை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### 04. கூறுபோடுதலைக் கட்டுப்படுத்துதல்

ஓர் ஏக்கர் அல்லது அதற்கு குறைவான தென்னங்காணிகளை மாத்திரம் துண்டாக்குவதற்கு இயலுமான வகையில் மட்டுப்பாடுகளை விதித்து, தற்போது காணப்படுகின்ற சட்டரீதியான ஏற்பாடுகளை திருத்தம் செய்வதற்கான முன்மொழிவு ஜனாதிபதியால் 2023 வரவு-செலவு திட்டம் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய ஏற்பாடுகளை வகுப்பதற்காக தேயிலை, இறப்பர், தென்னந்தோட்டங்களை (கூறுபோடுதலைக் கட்டுப்படுத்துதல்) சட்டத்தை திருத்தம் செய்வதற்காக தேவையான படிமுறைகளை மேற்கொள்வதற்காக பெருந்தோட்டத் துறை அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

> **அரச மருத்துவ மனைகளில் கட்டணம் செலுத்தும் நோயாளர் விடுதி வசதிகள் விரிவாக்கம் செய்யப்படவுள்ளன. அரச சுகாதார சேவைகளில் மேலதிக வசதிகளுக்குப் பதிலாக, தனிப்பட்ட ரீதியாக கட்டணம் செலுத்தி வசதிகளைப் பெறுவதற்கு பிரஜைகள் விருப்பத்துடன் உள்ளனர்**

### 05. ஒப்பந்தத்தை வழங்குதல்

அவுஸ்திரேலியா, சிட்னி விமான நிலையத்தில் சர்வதேச தரையிறக்க சேவைகளை வழங்குவதற்காக தற்போது குறித்த விமான நிலையத்தில் தரையிறக்க சேவைகள் வழங்குகின்ற அனைத்து உரிமப்பத்திரதாரர்களிடம் தரையிறக்க சேவை வழங்குநர்களிடம் மட்டுப்படுத்தப்பட்ட சர்வதேச போட்டி முறைமையின் கீழ் விலைமுறி கோரப்பட்டுள்ளது.

அதற்காக இரண்டு விலைமுறிகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தர பெறுகைக் குழுவின் பரிந்துரைக்கமைய குறித்த ஒப்பந்தத்தை மூன்று வருட காலப்பகுதிக்கு வழங்குவதற்கு அமைச்சரவை அங்கிகாரம்.

### 06. பல்கலைக்கழகத்தை தாபித்தல்

தற்போது சுகாதார அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படுகின்ற தாதிக் கல்லூரியை பல்கலைக்கழகமாக மாற்றியமைத்தல் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள முன்மொழிவுகளை ஆராய்ந்து அறிக்கையை சமர்ப்பிப்பதற்காக அதிகாரிகள் குழுவை நியமிப்பதற்கு 2023-03-01 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

அதிகாரிகள் குழுவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளைக் கருத்தில் கொண்டு, இலங்கை தேசிய தாதிப் பல்கலைக்கழகத்தை தாபிப்பதற்காக கொள்கை ரீதியான அங்கிகாரத்தை வழங்குவதற்கும், அதற்கான சட்டமூலத்தை தாரிப்பதற்கும் பதில் கல்வி அமைச்சராக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் சுகாதார அமைச்சர் ஆகியோர் இணைந்து சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

மத்திய பிரதேசம்

# பாலத்தில் பயணித்த 15 பேர் உயிரிழப்பு



பாலத்தில் சென்றுகொண்டிருந்த பஸ், வேகக் கட்டுப்பாட்டை இழந்து, தடுப்புகளை உடைத்துக் கொண்டு, கீழே விழுந்து விபத்துக்கு உள்ளானதில் 15 பேர் உயிரிழந்த சம்பவம் மத்திய பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.


மத்திய பிரதேசத்தில் கார்கோனில் உள்ள பாலத்திலேயே குறித்த விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நேற்றைய தினம் (09) இடம்பெற்ற இக்கொடூர விபத்தில் 15 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ள நிலையில், 25 பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்நிலையில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு நான்கு இலட்சம் ரூபாய் நிவாரணமாக வழங்க மத்திய பிரதேச முதலமைச்சர் சிவராஜ் சிங் சவுகான் உத்தரவிட்டுள்ளார்.

சேலம்

# அழுத குழந்தையை அடித்துக் கொன்ற தாய்



காதலனுடன் உல்லாசமாக இருந்த வேளை, குழந்தை அழுததால், அக்குழந்தையை தாயார் அடித்துக் கொலை செய்த சம்பவம் சேலத்தில் இடம்பெற்றுள்ளது.

சேலம் மாவட்டம், காடம்பட்டி பகுதியிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த பகுதியில் உள்ள செங்கல் சூளையில், பணிபுரிந்து வந்த கலைவாணி என்பவர், அதே சூளையில் பணிபுரிந்து வந்த மல்லேஸ் என்பவருடன் தகாத உறவில் ஈடுபட்டு வந்துள்ளார்.

இந்நிலையில், கடந்த சில நாள்களுக்கு முன்னர் குறித்த செங்கல் சூளையில் இருவரும் தனிமையில் இருந்த வேளை, கலைவாணியின் ஒரு வயதான குழந்தை அழுதுள்ளது.

இதனால் ஆத்திரமடைந்த இருவரும், குறித்த குழந்தையை கடுமையாகத் தாக்கியுள்ளனர். இந்நிலையில் குழந்தையின் கதறலைக் கேட்ட அக்கம் பக்கத்தினர், இது குறித்து விசாரிக்கவே குழந்தையின் உடல்நலம் சரியில்லை என்று கூறி நாடகமாடிவிட்டு குழந்தையை, சேலம் வைத்திய சாலையில் சேர்த்து விட்டு, இருவரும் தலைமறைவாகியுள்ளனர்.

இந்நிலையில், குழந்தை சிகிச்சை பலனின்றி உயிரிழக்கவே, பொலிஸாருக்கு இது குறித்து தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து தலைமறைவான இருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

திண்டுக்கல்

# "நான் பெற்ற தங்கப் பேனாவை நந்தினிக்கு பரிசளிக்கிறேன்"



தமிழகத்தில் நேற்றைய தினம் நடந்து முடிந்த பிளஸ் 2 (+2) பரீட்சையின் பெறுபேறுகள் வெளியாகியிருந்தன.


இப் பரீட்சையில் திண்டுக்கல் அண்ணாமலையார் பெண்கள் மேல்நிலை பாடசாலை மாணவி நந்தினி சாதனை படைத்துள்ளார். இவர் அனைத்து பாடங்களிலும் 100 மதிப்பெண்களை எடுத்து, மாநில அளவில் முதலிடத்தை பிடித்துள்ளார்.

இந்நிலையில், நந்தினிக்கு, கவிஞர் வைரமுத்து வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில், 'ஒரு தச்சுத் தொழிலாளியின் மகள் மாநிலத் தேர்வில் உச்சம் தொட்டிருப்பது பெண்குலத்தின் பெருமை சொல்கிறது. அண்மையில் நான்பெற்ற தங்கப் பேனாவைத் தங்கை நந்தினிக்குப் பரிசளிக்கிறேன். உன் கனவு மெய்ப்படவேண்டும்' என்றுள்ளது.

# சிறந்த வீரராக மெஸ்ஸி, வீராங்கனையாக பிறேஸர்-பிறைஸ்



ஆண்டின் சிறந்த விளையாட்டு வீரராக லியனல் மெஸ்ஸி பெயரிடப்பட்டுள்ள நிலையில், சிறந்த வீராங்கனையாக குறுந்தூர ஓட்ட சம்பியனான ஷெலி-அன் பிறேஸர்-பிறைஸ் தெரிவாகியுள்ளார்.

உலகக் கிண்ணத்தை வென்ற மெஸ்ஸி, கடந்த 2020ஆம் ஆண்டு இவ்விருதை போர்மியுலா வண் ஓட்டுநரான லூயிஸ் ஹமில்டனுடன் பகர்ந்திருந்தார்.

ஜமைக்காவின் பிறேஸர்-பிறைஸ், உலகத் தடகள சம்பியன்ஷிப்பில் 100 மீற்றரில் தங்கப் பதக்கத்தை வென்றிருந்தார்.

இதேவேளை, ஆண்டின் உலக அணியாக மெஸ்ஸி தலைவராகவுள்ள ஆர்ஜென்டீன ஆண்களின் கால்பந்தாட்ட அணி பெயரிடப்பட்டுள்ளது. அந்தவகையில், இவ்விரண்டு விருதுகளையும் வெல்லும் முதலாவது தடகளவீரராக மெஸ்ஸி மாறியுள்ளார்.

இந்நிலையில், கடந்தாண்டு ஐக்கிய அமெரிக்க பகிரங்க டென்னிஸ் பட்டத்தை வென்று தரவரிசையில் முதலாமிடத்துக்கு முன்னேறிய ஸ்பெய்னின் கார்லோஸ் அல்கரஸ், ஆண்டின் உலகத் திருப்புமுனையாக பெயரிடப்பட்டார்.

இதேவேளை, யூரோ சம்பியன்ஷிப் 2021ஆம் ஆண்டில் ஏற்பட்ட மாரடைப்பிலிருந்து குணமடைந்து இங்கிலாந்து பிறீமியர் லீக்குக்குத் திரும்பி டென்மார்க்குடன் உலகக் கிண்ணத்தில் போட்டியிட்ட கிறிஸ்டியன் எரிக்ஸன், ஆண்டின் உலக மீள்வருகை விருதைப் பெற்றுக் கொண்டார்.




## மருதமுனை ஈஸ்டேர்ன் யூத் விளையாட்டுக் கழகத்துக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைப்பு

ஏ.எல்.எம். ஷினாஸ்

மருதமுனை ஈஸ்டேர்ன் யூத் விளையாட்டுக் கழகத்துக்குத் தேவையான விளையாட்டு உபகரணங்களை அன்பளிப்பாக வழங்கி வைக்கும் நிகழ்வானது, மருதமுனை மசூர் மௌலானா விளையாட்டு மைதான கேட்போர் கூட மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

## ஐ.பி.எல்: பஞ்சாப்பை வென்ற கொல்கத்தா



இந்தியாவின் உள்ளூர் இருபதுக்கு - 20 தொடரான இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்), கொல்கத்தாவில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற பஞ்சாப் கிங்ஸுடனான போட்டியில் கொல்கத்தா நைட் றைடர்ஸ் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பஞ்சாப்

பஞ்சாப்: 179/7 (20 ஓவ. )

(துடுப்பாட்டம்: ஷீகர் தவான் 57 (47), ஷாருக் கான் ஆ.இ 21 (08), ஜிதேஷ் ஷர்மா 21 (18), றிஷி தவான் 19 (11), ஹர்பிறீட் பிறார் ஆ.இ 17 (09), லியாம் லிவிங்ஸ்டோன் 15 (09) ஓட்டங்கள். பந்துவீச்சு: வருண் சக்கரவர்த்தி 3/26 [4], சுயஷ் ஷர்மா 1/26 [4], நிதிஷ் ரானா 1/7 [1], சுனில் நரைன் 0/29 [4])

கொல்கத்தா: 182/5 (20 ஓவ. )

(துடுப்பாட்டம்: நிதிஷ் ரானா 51 (38), அன்ட்ரே ரஸல் 42 (23), ஜேஸன் றோய் 38 (24), ரிங்கு சிங்க் ஆ.இ 21 (10), ரஹ்மனுல்லாஹ் குர்பாஸ் 15 (12) ஓட்டங்கள். பந்துவீச்சு: ராகுல் சஹர் 2/23 [4], ஹர்பிறீட் பிறார் - [1], நாதன் எலிஸ் 1/29 [4], றிஷி தவான் 0/15 [2])

போட்டியின் நாயகன்: அன்ட்ரே ரஸல்

இந்நிலையில் சென்னையில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் டெல்லி கப்பிட்டல்ஸை சென்னை சுப்பர் கிங்ஸ் எதிர்கொள்ளவுள்ளது.

## உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டி: ராகுலை இந்திய குழாமில் பிரதியிட்ட கிஷன்



சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்கான இந்திய குழாமில் காயமடைந்த லோகேஷ் ராகுலை இஷன் கிஷன் பிரதியிட்டுள்ளார்.

இதேவேளை இன்னுமொரு காயமடைந்த வீரரான ஜெய்தேவ் உனத்கட் தொடர்பான முடிவு ப்ப்பின்னர் எடுக்கப்படவுள்ளது.

இந்நிலையில், சூரியகுமார் யாதவ், ருத்துராஜ் கைகவாட், முகேஷ் குமார் ஆகியோர் மேலதிக வீரர்களாகப் பெயரிடப்பட்டுள்ளனர்.

## உலகக் கிண்ணத்தில் நியூசிலாந்தின் அணித் தலைவருக்கான போட்டியில் சௌதி, லேதம்



சர்வதேச கிரிக்கெட் சபையின் உலகக் கிண்ணத் தொடருக்கான நியூசிலாந்தின் அணித்தலைவராக, கேன் வில்லியம்ஸன் காயமடைந்த நிலையில் டிம் சௌதியும், டொம் லேதமும் கருத்திற் கொள்ளப்படுகின்றனர்.

அண்மையில் வில்லியம்ஸனை லேதம் பிரதியிட்ட நிலையில், டெஸ்ட் போட்டிகளுக்கான அணித்தலைவராக சௌதி காணப்படுகின்றார்.

பிரித்தானியா

# முதல் அதிகாரபூர்வ உருவப்படம் வெளியீடு



பிரித்தானியாவின் புதிய மன்னராக 74 வயதான 3ஆம் சார்ள்ஸுக்கு நேற்று முன்தினம் (06) முடிசூட்டப்பட்டது.

இலண்டனில் தேம்ஸ் நதிக்கரையில் அமைந்துள்ள வெஸ்ட் மினிஸ்டர் அபேயில் மிகவும் பிரம்மாண்டமாக நடைபெற்ற இம்முடிசூட்டு விழாவில், உலகின் முன்னணி பிரமுகர்கள் பங்கேற்றிருந்தனர்.

இந்நிலையில், மன்னரின் முதல் அதிகாரப்பூர்வ உருவப்படத்தை பக்கிங்ஹாம் அரண்மனை வெளியிட்டுள்ளது. மொத்தம் நான்கு புகைப்படங்கள் வெளியிடப்பட்டுள்ள நிலையில், தனி உருவப்படத்திற்காக, பக்கிங்ஹாம் அரண்மனையில் உள்ள சிம்மாசன அறையில் முழு அலங்காரத்தில், இம்பீரியல் ஸ்டேட் கிரீடத்தை மன்னர் சார்ள்ஸ் அணிந்துள்ளார்.

சிலுவையுடன் கூடிய இறையாண்மை உருண்டை மற்றும் செங்கோலை கைகளில் பிடித்துள்ளார்.

குயின் மேரியின் கிரீடம் மற்றும் எஸ்டேட் ரோப் அணிந்த ராணி கமிலாவின் தனி உருவப்படமும், மன்னரும், ராணியும் இருக்கும் புகைப்படமும், சிம்மாசன அறையில் பணிபுரியும் அரச குடும்ப உறுப்பினர்களுடன் மன்னர் மற்றும் ராணி இருக்கும் குழுப்புகைப்படமும் வெளியிடப்பட்டுள்ளது.

அமெரிக்கா

# இறந்தபின் மீண்டும் உயிர்பெற முடிவு



இறந்தவர்களை உயிர்ப்பிக்கும் வகையிலான கண்டுபிடிப்புகள், தொழில்நுட்பங்கள் எதிர்காலத்தில் உருவாகலாம் என்ற நம்பிக்கையில், அமெரிக்காவிலுள்ள அல்கார் என்ற அமைப்பு இறந்து போன மனித உடல்களையும் விலங்குகளின் உடல்களையும் கிரையோனிக்ஸ் என்ற முறையில் உறைநிலையில் பதப்படுத்தி பாதுகாத்து வருகிறது.

இதில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உறுப்பினர்களாக உள்ளனர். இந்த நிலையில் பிரபல மின்னணு வணிக நிறுவனமான பே பால் நிறுவனத்தின் நிறுவனர்களில் ஒருவரான பீட்டர் தீல்ஊடகம் ஒன்றுக்கு பேட்டியளித்தபோது, தாமும் அந்த நிறுவனத்தில் பதிவு செய்து வைத்திருப்பதாகக் கூறியுள்ளார்.

ஸ்பெயின்

# விந்து கலந்து உணவு தயாரிக்கும் உணவகம்

உணவகமொன்று விந்து கலக்கப்பட்ட உணவுகளை அறிமுகப்படுத்தவுள்ளது. ஸ்பெயினில் மாட்ரிட் நகரில் இயங்கிவரும் பிரபல உணவகமொன்றே குறித்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது. இது குறித்து அவ்வுணவகத்தின் உரிமையாளரும் பிரபல சமையல் நிபுணருமான டேவிட் முனோஸ் கருத்துத் தெரிவிக்கையில் "எனது உணவகத்தின் உணவுப் பட்டியலில் மீனின் விந்துக்களால் செய்யப்பட்ட உணவுகளை இணைக்கவுள்ளேன். பஃபர் ஃபிஷ், மாங்க் ஃபிஷ் மற்றும் காட் ஆகியவற்றிலிருந்து பெறப்படும் விந்துகளைக் கொண்டே இந்த உணவுகள் தயாரிக்கப்படவுள்ளன. ஜப்பானில் இது போன்ற உணவு வகைகள் சர்வ சாதாரணம். அதனால் ஈர்க்கப்பட்டே இம் முடிவை எடுத்துள்ளேன்" இவ்வாறு தெரிவித்துள்ளார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 10 மே 2023, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.